## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

## கைத்தறி மற்றும் துணிநூல்

# கொள்கை விளக்கக் குறிப்பு

**2014 – 2015**

**மானியக் கோரிக்கை எண்.17**

**எஸ். கோகுல இந்திரா**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

**©**
**தமிழ்நாடு அரசு**
**2014**

**2014 – 2015 ஆம் ஆண்டிற்கான**
**கொள்கை விளக்கக் குறிப்பு**
**கைத்தறி மற்றும் துணிநூல்**

*அட்டவணை*


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| *1* | முன்னுரை | **1 – 2** |
| *2* | ஜவுளித் தொழிலின் உபப்பிரிவுகளின் மீதான கண்ணோட்டம் | **3 – 17** |
| *3* | கைத்தறி மற்றும் துணிநூல் துறை | **17 – 20** |
| *4* | துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் | **20 – 60** |
| *5* | துறையின் இதர முக்கிய திட்டங்கள் | **60 – 78** |
| *6* | திருப்பூரிலுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | **78 – 80** |
| *7* | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம் | **80 – 83** |

| வ. எண் | | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|---|
| *8* | துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் | | |
| | **8.1** | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்., (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை | **84 - 107** |
| | **8.2** | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை | **107 - 110** |
| | **8.3** | கூட்டுறவு நூற்பாலைகள் | **111 - 116** |
| | **8.4** | தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர் | **116 - 118** |
| | **8.5** | தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் | **118 - 120** |
| | **8.6** | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு | **120 - 123** |
| | **8.7** | தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட், (டான்ஸ்பின்), சென்னை | **124** |
| *9* | 2014 – 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு | | **125 - 128** |

## கைத்தறி மற்றும் துணிநூல்
## 2014-2015

## 1. முன்னுரை

இந்திய ஜவுளித் தொழில், மாறுபட்ட பல்வேறு பரிணாமங்களில் ஒருபுறம் கைநூற்பு மற்றும் கைத்தறி நெசவும், மறுபுறம் அதிக அளவு முதலீட்டுடன் நவீனமயமான ஜவுளி ஆலைகளைக் கொண்டும் விளங்குகின்றன. பன்முகப்படுத்தப் பட்டுள்ள விசைத்தறி / பின்னலாடைத் தொழில், ஜவுளித் தொழிலின் பெரும் அங்கமாக அமைகிறது. விவசாயத்துடன் நெருங்கிய இணைப்பும், பண்டைய கலாச்சார பண்பும், பாரம்பரியமும் கொண்ட இந்திய ஜவுளித் தொழில் பிற நாடுகளின் ஜவுளித் தொழிலோடு ஒப்பிடுகையில் தனித்தன்மை பெற்று விளங்குகிறது. இத்தொழில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளின் வேறுபட்ட சந்தைப் பகுதிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான பல்வேறு வகையிலான பொருட்களை உற்பத்தி செய்வதற்கான திறன் பெற்றுள்ளது.

ஜவுளித்தொழில் இந்தியாவில் மிகப்பெரிய தொழிலாகும். இது 45 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய தனிப்பெரும் தொழிலாகத் திகழ்கிறது. இந்திய ஜவுளித் தொழில், தொழில் உற்பத்தியில் 14 விழுக்காடு பங்களித்து, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்



4 விழுக்காடும், நாட்டின் மொத்த ஏற்றுமதிச் சந்தையில் 11 விழுக்காடு அளவிற்கும் பங்களித்து வருகிறது.

ஜவுளித் தொழிலானது அமைப்பு சார்ந்த பருத்தி / செயற்கை இழை ஜவுளி ஆலைத்தொழில், செயற்கை இழை மென் இழை நூல் தொழில், கம்பளி ஜவுளித் தொழில், பட்டு வளர்ப்பு மற்றும் பட்டு ஜவுளித் தொழில், கைத்தறி, கைவினை, சணல் மற்றும் சணல் ஜவுளித் தொழில் மற்றும் ஜவுளி ஏற்றுமதி போன்ற பெருமளவிலான உபப்பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்திலும், தொழில் உற்பத்தியிலும் ஜவுளித் தொழிலானது பெரும் பங்கு வகித்து, பெரும்பாலானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதுடன், நாட்டு மக்களின் துணித்தேவையினை பூர்த்தி செய்தும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் பெரும்பங்கு அளிப்பதன் மூலமாகவும், தனித்தன்மை பெற்று விளங்குகிறது. தமிழ்நாடு மாநிலம் மட்டுமே, முழுமையான ஜவுளி மதிப்பு தொகுப்பாக இருப்பதால், ஜவுளித் தொழிலில் மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு பங்களிப்பதோடு, 47 விழுக்காடு நூற்பாலைத் திறனுடனும், 20 விழுக்காடு விசைத்தறி திறனுடனும், 50 இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது.

## 2. ஜவுளித் தொழிலின் உபப்பிரிவுகளின் மீதான கண்ணோட்டம்

### 2.1. கைத்தறிப் பிரிவு

இந்திய கைத்தறி நெசவுக்கலையின் தோற்றம் பழமை வாய்ந்த மூடுபனிக் கூட்டமாக உள்ளது. நெசவு செய்யப்பட்ட பருத்தித்துணிகள், எலும்பினாலான ஊசிகள் மற்றும் நூற்புகதிர்கள் போன்றவற்றின் சிதறல்கள் சிந்து சமவெளி நாகரீகங்களின் தொன்மையான பகுதிகளான மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பா ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், ரிக்வேதம் மற்றும் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களிலும் நெசவுக்கலை குறித்து விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எகிப்து நாட்டிலுள்ள போஸ்டட் கல்லறைகளில் அச்சுக்கட்டையினால் அச்சிடப்பட்ட மற்றும் தடுப்பாற்றலுடன் கூடிய சாயமிடப்பட்ட துணிகள் காணப்படுவது மத்திய காலகட்டங்களில் இந்திய பருத்தி ஜவுளி ஏற்றுமதி அதிக அளவில் நடைபெற்றுள்ளதற்கு ஆதாரமாக விளங்குகிறது.

மேற்காணும் விவரங்கள், கைத்தறித் தொழில் வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்தில் வேரூன்றி இருந்ததற்கான வரலாற்றுச் சான்றாக அமைந்துள்ளது. இந்திய கைத்தறித் தொழில் நீண்டகால பாரம்பரியமிக்க மிகச்சிறந்த திறனுடன் பழங்காலத்திற்கு முன்பே இருந்ததாகக் கருதப்படுகிறது.



கைத்தறித் தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகப் பெரும் அமைப்புசாரா பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்றாக விளங்குவதோடு, ஊரக மற்றும் ஊரகம் சார்ந்த பகுதிகளில் உள்ள மக்களுக்கு வாழ்வாதாரம் வழங்குவதில் ஒருங்கிணைந்த பகுதியாகத் திகழ்கிறது. கைத்தறி நெசவு விலைமதிப்பு மிக்க மற்றும் உயிரோட்டமுள்ள இந்திய கலாச்சாரப் பாரம்பரியத்தை உள்ளடக்கியதாகும். இப்பிரிவு, குறைந்த முதலீடு, குறைவான மின்சக்தி பயன்பாடு, சுற்றுச்சூழல் தோழமை, சிறு உற்பத்திக்கான இலகுத் தன்மை மற்றும் சந்தை நிலவரத்திற்கு ஏற்ப புதுமையான நவீன உத்திகளை ஏற்றுக் கொள்ளுதல் போன்ற நன்மைகளைக் கொண்டுள்ளது. இது ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்குத் தேவையான தொழில் நுணுக்கங்களை தொய்வின்றி வழங்கி கிராமிய அளவில் இயற்கையின் உற்பத்திச் சொத்தாக விளங்குகிறது.

கைத்தறி நெசவு பெரிய அளவில் பன்முகப்படுத்தப்பட்டதும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய சமூகத்திலிருந்து வரும் நெசவாளர்கள், தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்தும், ஜவுளி உற்பத்திக்குப் பங்களித்தும் வருகிறார்கள். இத்தொழிலைச் சார்ந்துள்ள நெசவாளர்கள், பல்வேறு மாநிலங்களின் தொன்மையான நெசவுத் தொழிலை நிலைத்து நிற்கச் செய்து வருகின்றனர். கைத்தறி துணி உற்பத்தியில்

வடிவமைக்கப்பட்ட கலை மற்றும் நுண்ணிய வேலைப்பாடுகள் ஈடு இணையற்றவையாகவும், சில நெசவுகள் மற்றும் வடிவமைப்புகள் நவீன இயந்திரங்களால் கூட இன்னமும் உற்பத்தி செய்ய இயலாத நிலையிலும் உள்ளது. கைத்தறி தொழில் அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய பிரபலமான துணி வகைகளை அதிக அளவில் உற்பத்தி செய்வதுடன், மாதக்கணக்கில் நெசவு மேற்கொண்டு உற்பத்தி செய்ய வேண்டிய நேர்த்தியான அலங்கார ஆடைகளையும் உற்பத்தி செய்து வருகிறது.

கைத்தறி தொழில் இந்தியப் பொருளாதாரத்தில் தனித்தன்மை பெற்று விளங்குவதோடு, வேலை வாய்ப்பு, துணி உற்பத்தி மற்றும் மதிப்புக் கூட்டு இனங்களை வழங்குவதில் முக்கியப் பங்கு வகித்து, நாட்டின் உயர்ந்த கலாச்சாரப் பண்பாட்டினைப் பாதுகாத்து வருகிறது. 2009–2010ஆம் ஆண்டு இந்திய கைத்தறி கணக்கெடுப்பின்படி, சுமார் 27.83 இலட்சம் கைத்தறிக் குடும்பங்கள், நெசவு மற்றும் நெசவு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றன. இப்பிரிவு நாட்டில் 43 இலட்சத்திற்கும் அதிகமான நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிவோருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. கைத்தறித் தொழில், மொத்த ஜவுளி உற்பத்தியில் ஏறத்தாழ 11 விழுக்காடு அளவிற்கு பங்களிப்பதுடன், ஏற்றுமதி வருவாயை ஈட்டுவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.






**கைத்தறி நெசவு**


தமிழ்நாட்டில் கைத்தறித் தொழிலானது, நீண்டகால பாரம்பரிய மிக்க, திறன் வாய்ந்த தொழில் வேலைப்பாட்டினைக் கொண்டு, மரபுரிமையினைப் பாதுகாப்பதிலும் மாநிலத்தின் பொருளாதாரத்திலும் முக்கியமான பங்கு வகித்து, பிரசித்து பெற்று விளங்குகிறது. தனித்தன்மை வாய்ந்த கைத்தறி நெசவு ரகங்களான பட்டு சேலைகள், பருத்தி சேலைகள், வீட்டு உபயோகத் துணி வகைகள், வேட்டிகள், கைலிகள் மற்றும் துண்டு ரகங்கள் உற்பத்தியில் தமிழகம் பெருமை பெற்றுள்ளது. சமீபத்திய கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் **1.89** இலட்சம் நெசவாளர் குடும்பங்கள் உள்ளதோடு, இத்தொழில் **3.19** இலட்சம் நெசவாளர்கள் மற்றும் உப தொழில் புரிவோருக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

**தமிழ்நாட்டில் 1161 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன.** 2013-2014ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், ரூ.**821.35** கோடி மதிப்பிலான **986.29** இலட்சம் மீட்டர் கைத்தறி துணிகளை உற்பத்தி செய்து, ரூ.**936.66** கோடி மதிப்பிற்கு கைத்தறி துணிகளை விற்பனை செய்துள்ளன. இவற்றில், **819** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன.






**கைத்தறி துணிகளின் உற்பத்தி**




**கைத்தறி துணிகளின் விற்பனை**

மைய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வரும் கைத்தறி நெசவாளர்களுக்கான வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்கள் அனைத்தும், மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**2.2 விசைத்தறிப்பிரிவு**

இந்திய ஜவுளித் தொழிலில், விசைத்தறிப்பிரிவு , துணி உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு வழங்குவதில் முக்கிய பிரிவுகளில் ஒன்றாக விளங்குகிறது. நாட்டின், பன்முகப்படுத்தப்பட்ட விசைத்தறிப்பிரிவு 58.68 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதோடு நாட்டின் மொத்தத் துணி உற்பத்தியில் 60 விழுக்காடு பங்களிக்கிறது. விசைத்தறி மூலம் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளில் 60 விழுக்காடு துணி செயற்கை இழைகளாகும். மேலும், ஏற்றுமதிக்கான துணி இரகங்களில் 60 விழுக்காடிற்கு மேல் விசைத்தறி மூலம் பெறப்படுகிறது. ஆயத்த ஆடைகள் மற்றும் வீட்டு உபயோகத் துணிப்பிரிவுகள் தங்களது துணித் தேவைகளுக்கு விசைத்தறியையே பெருமளவு சார்ந்துள்ளன. நாட்டிலுள்ள 23.47 இலட்சம் விசைத்தறிகளில், 1.15 இலட்சம் விசைத்தறிகள் நாடாயில்லா தானியங்கி விசைத்தறிகளாகும்.





**விசைத்தறி**

தமிழ்நாட்டின் விசைத்தறிப் பிரிவு மக்களின் துணித் தேவையினை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டின் விசைத்தறித் தொழிலானது, மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவில் விசைத்தறிகளைக் கொண்டுள்ளது. இத்தொழில், சுமார் 10.12 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குகிறது. இந்தியாவிலுள்ள 23.47 இலட்சம் விசைத்தறிகளில், 4.05 இலட்சம் சாதா விசைத்தறிகள் மற்றும் 20,000 நாடாயில்லா தானியங்கி விசைத்தறிகள் தமிழ்நாட்டில்

அமைந்துள்ளன. 53479 விசைத்தறிகள் 177 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கீழ் இயங்கி வருகின்றன.

இம்மாநிலத்தில் நாமக்கல், ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், வேலூர், மதுரை, கரூர், திருப்பூர், திருவள்ளூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் விசைத்தறிகள் பெரும்பான்மையாக அமைந்துள்ளன. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளிச் சிறார்களுக்கான விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களுக்குத் தேவையான துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2013–2014ஆம் ஆண்டில் ரூ.450.88 கோடி மதிப்புள்ள 15.57 கோடி மீட்டர் துணிகள் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.405.94 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 2.3 நூற்பாலைப் பிரிவு

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு நூற்பாலைப் பிரிவு முதுகெலும்பாகத் திகழ்கிறது. பெரும்பாலான நூற்பாலைகள் தனியார் துறை மூலம் நிர்வகிக்கப்படுவதுடன் பருத்தி நூற்பு வகையைச் சார்ந்தவையாகும். இந்தியாவிலுள்ள 3303 சிறிய, நடுத்தர மற்றும் பெரிய துணி நூற்பு ஆலைகளில், 1999 ஆலைகள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. அதே போன்று,



இந்தியாவிலுள்ள 1341 சிறிய நூற்பாலைகளில், 1041 ஆலைகள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. இம்மாநிலத்தில் உள்ள நூற்பாலைகளில், 18 கூட்டுறவு நூற்பாலைகளும், 7 தேசீய துணிநூல் கழக ஆலைகளும் அடங்கும். இம்மாநிலத்திலுள்ள நூற்பு ஆலைகள், 22.42 மில்லியன் கதிர்களுடன் இயங்கி வருகின்றன. மாநிலத்தின் நூல் உற்பத்தி, ஆண்டொன்றுக்கு சுமார் 2025.64 மில்லியன் கிலோகிராமாகவும், இது தேசிய அளவிலான உற்பத்தியில் 46.78 விழுக்காடு ஆகும். **பருத்தி மற்றும் பருத்தி அல்லாத நூல் உற்பத்தியில் தமிழ்நாடு நாட்டிற்கே முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. மேலும் பருத்தி நூல் ஏற்றுமதியிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.** இந்திய ஜவுளித் தொழில் மூலம் மத்திய மாநில அரசுகள் கணிசமான வருவாய் ஈட்டுவதுடன், ஏற்றுமதி வாயிலாக அந்நிய செலவாணியையும் ஈட்டி வருகின்றன.



**நூற்பாலை**

### 2.3.1 பருத்தி பயிரிடுதல்

தமிழ்நாட்டிலுள்ள ஜவுளி ஆலைகளுக்கு, தற்போது ஆண்டொன்றுக்கு தேவைப்படும் சுமார் 120 இலட்சம் பருத்திப் பொதிகளில், 5 இலட்சம் பருத்திப் பொதிகள் மட்டுமே தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதால், எஞ்சிய பருத்தித் தேவை பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்டு ஈடு செய்யப்படுகிறது. தமிழகத்தில் கோயம்புத்தூர், ஈரோடு, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் தேனி ஆகிய இடங்களில் அதிக அளவிற்கு பருத்தி பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான பருத்தி இந்திய அரசு நிறுவனமான இந்திய பருத்திக் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. **அரசு**



**50 கோடி ரூபாய் தொடக்க ஒதுக்கீட்டுடன் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் என்றதொரு பெருந்திட்டத்தை தொடங்க உத்தேசித்துள்ளது.** பருத்தி உற்பத்தி திறனையும், மொத்த உற்பத்தியையும் அதிகரிப்பதில் இந்த இயக்கம் கவனம் செலுத்தும். மத்திய அரசின் பருத்தி தொழில்நுட்ப இயக்கத்தில் உள்ள நிதியும் இந்த மாநில இயக்கத்துடன் ஒருங்கிணைக்கப்படும். இந்த இயக்கத்தின் மூலம் 2014-2015ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 3.7 இலட்சம் ஏக்கர் பரப்பை பருத்தி பயிர் சாகுபடியின் கீழ் கொண்டு வரவும், வரும் 5 ஆண்டுகளில் இதை 6 இலட்சம் ஏக்கராக உயர்த்தவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2.4 ஆயத்த ஆடைகள் மற்றும் பின்னலாடைப் பிரிவு

ஜவுளித்தொழிலின் ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைப் பிரிவு, நாட்டின் தொழில் வளர்ச்சியில் மிகவும் இன்றியமையாத பங்கினை வகிக்கிறது. தமிழகத்தில் ஆயத்த ஆடைத் தொழில் மூலப்பொருள் முதல் மதிப்புக் கூட்டப்பட்ட இறுதிப் பயன்பாட்டு பொருள் வரை, தன்னிறைவு பெற்றுள்ளது. கிராமப் பகுதிகளிலுள்ள பெண்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு வழங்குவதே ஆயத்த ஆடை தொழிலின் குறிப்பிடும்படியான சிறப்பம்சம் ஆகும்.




**ஆயத்த ஆடை பிரிவு**

நமது மாநிலத்தில் அதிகளவிலான பின்னலாடைத் தொழில் நிறுவனங்கள் திருப்பூரில் அமைந்துள்ளன. இந்தியாவில் மொத்தம் உள்ள 13,000 பின்னலாடைத் தொழில் நிறுவனங்களில், 2500 நிறுவனங்கள் திருப்பூரில் அமைந்துள்ளதுடன், 3.50 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பும் அளித்து வருகின்றன. 2013-2014ஆம் ஆண்டில் 24.50 மில்லியன் சதுரமீட்டர் துணி திருப்பூரில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில், திருப்பூரில் மொத்த ஏற்றுமதி விற்பனை சுமார் ரூ.17,800 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில் திருப்பூரில்



முன் எப்போதும் இல்லாத வகையில் அதிகளவு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

### 2.5 பதனிடும் பிரிவு

ஜவுளி பதனிடுதல், ஜவுளி தொழில் மதிப்பீட்டு தொகுப்பில் மிகவும் முக்கியமானதொரு அங்கம் வகிக்கிறது. பதனிடும் பிரிவு, துணியின் மதிப்பு மற்றும் தரம் ஆகியவற்றை நிர்ணயிப்பதோடு, அதிகப்படியான புதுமையைப் புகுத்துவதற்கு வாய்ப்புகளையும், இறுதிப் பொருளின் மீது தாக்கத்தினையும் ஏற்படுத்துகிறது. இந்தியாவில் சுமார் 2300 பதனிடும் ஆலைகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவைகள் தனி அலகுகள் ஆகவும், 22 ஆலைகள் மட்டுமே நூற்பு, நெசவு அல்லது பின்னலாடை இணைந்தவையாகவும் உள்ளன. மேலும், இந்தியாவில் பதனிடும் தொழிலில், 27,000 உற்பத்தியாளர்களும், 48,000 ஒப்பந்ததாரர்களும், 1000 ஆயத்த ஆடை உற்பத்தியாளர்-ஏற்றுமதியாளர்களும் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் பதனிடும் தொழில் பின்வரும் நான்கு பிரிவுகளாக இயங்கி வருகிறது;

- கையினால் பதனிடும் ஆலைகள்.
- பகுதியளவிலான மின்சக்தியை பயன்படுத்தி பதனிடும் ஆலைகள்.

- மின்சக்தியைப் பயன்படுத்தி பதனிடும் ஆலைகள்.
- கூட்டு ஆலை அல்லது பகுதி கூட்டு ஆலைகளுடன் இணைந்த பதனிடும் ஆலைகள்.

## 3. கைத்தறி மற்றும் துணிநூல் துறை

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முதன்மை நோக்கங்கள்:–

(i) கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் துறை மற்றும் அவற்றைச் சார்ந்த இதர பிரிவுகளின் வளர்ச்சிக்காக செயல்படுவது,

(ii) இத்தொழில் சார்ந்த அனைத்து பிரிவினர் நலனுக்காக, குறிப்பாக, கைத்தறி நெசவாளர்கள் மற்றும் துணிநூல் தொழிலாளர்களின் நலனுக்காக பாடுபடுவது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் தலைவராக கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் செயல்பட்டு வருகிறார். இவருக்கு உதவியாக தலைமையிடத்தில் பல்வேறு நிலை அலுவலர்களும், சரக அளவில் துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்களும் பணிபுரிந்து வருகின்றனர். கைத்தறி மற்றும் துணிநூல் தொழிலின் வளர்ச்சிக்காகவும், நெசவாளர்கள் மற்றும் துறை சார்ந்த இதர பிரிவினர்களின் நலனுக்காகவும்,



பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு துறைக்கு உள்ளது. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அரசின் கொள்கைகளை செயல்படுத்துவதுடன், திட்டங்களை சரக துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் மூலம் நெசவாளர்களுக்கு சீரிய முறையில் சென்றடைவதை உறுதி செய்கிறார்.

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மாநிலத்தின் கைத்தறி மற்றும் துணிநூல் சார்ந்த கூட்டுறவு அமைப்புகளின் “செயல் பதிவாளராக” செயல்பட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், **1983** மற்றும் விதிகள், **1988**-இன்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. துறை சார்ந்த அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல், நூல் மற்றும் துணிகளின் உற்பத்தியினை அதிகரித்து நியாய விலையில் கிடைக்க செய்தல் போன்ற ஒட்டுமொத்த பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது. கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்படும் நிறுவனங்களுக்குத் தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்கள் விநியோகம் மற்றும் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளை சொந்த விற்பனை நிலையங்கள், முகவர் விற்பனை நிலையங்கள், கோ–ஆப்டெக்ஸ் மற்றும் லூம் வேர்ல்டு விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யத்

தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிறப்பு கவனம் செலுத்தும் பொறுப்பும் மத்திய மாநில அரசுகளின் அனைத்து திட்டங்களையும் உருவாக்குதல், திட்டமிடுதல்,செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவை இத்துறையின் பொருப்புகளாகும்.

இயக்குநருக்கு உதவியாக தலைமையகத்தில் கூடுதல் இயக்குநர் (கைத்தறி மற்றும் துணிநூல்), இணை இயக்குநர் (கைத்தறி), இணை இயக்குநர் (சீருடை), இணை இயக்குநர் (துணிநூல்), நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், துணை இயக்குநர் (துணிநூல்) மற்றும் துணை இயக்குநர் (அமலாக்கம்) ஆகிய அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ், பின்வரும் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

- 20 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் அலுவலகங்கள்
- 6 அமலாக்க அலுவலகங்கள் (சென்னை தலைமையகம் மற்றும் 5 சரக அலுவலகங்கள்)
- 1161 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்
- 177 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்



- 18 கூட்டுறவு நூற்பாலைகள், (அண்ணா (தேனி), பாரதி (தூத்துக்குடி), புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஆகிய 5 கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது (செயல்பட்டு வருகின்றன).
- தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்லிமிடெட், (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை.
- தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் லிமிடெட், சென்னை.
- தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்.
- தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம்.
- தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு.
- தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை.

## 4. துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

### 4.1 விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம்

அரசு, பொங்கல் பண்டிகை காலத்தில் வேட்டி, சேலை விநியோகிக்கும் வகையில் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்

கூட்டுறவு சங்கங்களின் 11,000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 54,000 விசைத்தறித் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவது மட்டும் இல்லாமல் தமிழ் நாட்டில், கிராம மற்றும் நகர்புறங்களில் வசிக்கும் 3.45 கோடி மக்களின் துணித் தேவையினையும் பூர்த்தி செய்கிறது. இத்திட்டத்திற்குத் தேவையான நூல் கொள்முதல் செய்தல் மற்றும் வேட்டி சேலைகளை உற்பத்தி செய்து திட்டத்தினை செயல்படுத்துதல் போன்றவை இத்துறையின் பொறுப்புகளாக உள்ளன.

2014ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு 172.51 இலட்சம் சேலைகள் மற்றும் 171.18 இலட்சம் வேட்டிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. அரசு, பொங்கல் 2014 பண்டிகையின் போது 40 நெ பருத்தி நூலுக்கு மாற்றாக 60 நெ சாயமிட்ட சன்ன இரக நூலினைக் கொண்டு மக்கள் விரும்பும் வண்ணங்களில் தயாரிக்கப்பட்ட தரம் உயர்த்தப்பட்ட சேலைகள் அறிமுகப்படுத்தி விநியோகிக்கப்பட்டன.

அரசு இத்திட்டத்தினை பொங்கல் 2015ஆம் ஆண்டுக்கு தொடர்ந்து செயல்படுத்துவதற்கு, 2014-2015ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.499.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.





**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொங்கல் 2014–க்கான விலையில்லா வேட்டி சேலை விநியோகத்தினை குன்னூரில் 04.01.2014 அன்று தொடங்கி வைத்தார்கள்**

## 4.2 முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்குதல்

அரசு, ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைக் காலங்களில், முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினையும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான வேட்டி மற்றும் சேலைகளும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்கு முகமை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு 23.35 இலட்சம் சேலைகள் மற்றும் 8.51 இலட்சம் வேட்டிகள் இத்திட்டத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டன. 2014 பொங்கல் பண்டிகைக்கு, 21.08 இலட்சம் சேலைகள் மற்றும் 8.18 இலட்சம் வேட்டிகள் முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2014–2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



## 4.3 பள்ளிச் சிறார்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டம்

விலையில்லா சீருடை வழங்கும் திட்டம், டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு 1985–1986ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, 2012–2013ஆம் கல்வியாண்டு முதல் 4 இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தற்போது இத்திட்டத்தின் கீழ், 6ஆம் வகுப்புக்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டையும், மாணவிகளுக்கு பாவாடை, தாவணிக்குப் பதிலாக சல்வார் கமிஸ், துப்பட்டாவும் வழங்கப்பட்டு வருகின்றன.


இத்திட்டத்திற்குத் தேவையான சீருடை இரகங்களான மெரூன் டிரில், மெரூன் கேஸ்மெண்ட், லைட் பிரவுன் தாவணி, லைட் பிரவுன் சர்ட்டிங் மற்றும் மெரூன் சர்ட்டிங் ஆகியவை கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் மற்றும் தமிழ்நாடு துணிநூல் கழகம் ஆகியவை முகமை நிறுவனங்களாக நியமிக்கப்பட்டு, சீருடைத் துணி இரகங்களை

சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறைக்கு விநியோகம் செய்து வருகின்றன. இதுதவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான சீருடைத் துணி இரகங்களும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டம், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 10,000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 53,000 விசைத்தறித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றது.

2013–2014ஆம் கல்வியாண்டில், இத்திட்டத்தின் கீழ், 559.85 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி இரகங்கள் உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில் ரூ.309.68 கோடி அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2014–2015ஆம் கல்வி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.






**பள்ளிச் சிறார்களுக்கான விலையில்லா சீருடை திட்டம் உற்பத்தி – 2013–14 (இலட்சம் மீட்டர்)**

### 4.4 தள்ளுபடிமானியத் திட்டம்

தமிழ்நாடு அரசு, கைத்தறித் துணிவகைகளின் விற்பனையை மேம்படுத்திட, தள்ளுபடி மானியத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் விற்பனையை அதிகரிப்பதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர் வேலை வாய்ப்பினை உறுதி செய்வதுடன், ஆலை மற்றும் விசைத்தறித் தொழில்களால் ஏற்படக்கூடிய கடுமையான போட்டியிலிருந்து கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கிறது.

மாநில அரசு, தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடியினை வழங்கவும், அதில் பருத்தி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.100/– ம், பட்டுத் துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 20 விழுக்காடு அல்லது ரூ.200/– ம், இதில் எது குறைவோ, அதனை அனுமதித்துள்ளது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் ஜனவரி



31ஆம் தேதி வரை 139 நாட்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன், கூடுதலாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடியும் சேர்த்து 30 விழுக்காடு தள்ளுபடி மானியம் கைத்தறித் துணிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இச்சிறப்புத் தள்ளுபடியின்கீழ் பருத்தி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு அதிகபட்சமாக 30 விழுக்காடு அல்லது ரூ.150/–ம், பட்டு இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.300/–ம், இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக அனுமதிக்கப்படுகிறது. 2013–2014ஆம் ஆண்டில், தள்ளுபடி மானியத் திட்டத்தின் கீழ் ரூ.78.455 கோடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2014–2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2014–2015ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.78.455 கோடி இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.5 வட்டி மானிய திட்டம்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (நபார்டு வங்கி) மறு நிதியுதவி திட்டத்தின் கீழ் பெறப்படும் நடைமுறை மூலதனக் கடன்

தொகைக்கு 4 விழுக்காடு வட்டியினை மானியமாக வழங்க, வட்டி மானியத் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வட்டிச் சுமையினைக் குறைப்பதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்குவதே வட்டி மானியத் திட்டத்தின் நோக்கமாகும்.

வட்டி மானியம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு, காலாண்டுக்கு ஒருமுறை வழங்கப்பட்டதற்குப் பதிலாக, நவம்பர் **2012** முதல் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இதனை விரைவுப்படுத்தி வழங்கும்பொருட்டு, ஒப்பளிப்பு செய்யும் அதிகாரம் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**2013–2014**ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.**10.50** கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் **2014–2015**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு 2014-2015ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**10.50** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 4.6 கைத்தறிப் பிரிவிற்கான புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு திட்டம்

கைத்தறிப் பிரிவிற்காக மைய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெசவுக்காக கடன் பெற்ற கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தனியார் நெசவாளர்கள், கூட்டுப் பொறுப்பு குழுக்கள், சுய உதவி குழுக்கள் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

இத்திட்டத்தின் கீழ், தவணைக் கடந்த கடன் தொகையில் அசல் **100** விழுக்காடு, வட்டி **25** விழுக்காடு திரும்பப் பெறுவதற்கான நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, சங்கங்களில் ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட துணி சரக்கிருப்பு, நிலம் மற்றும் கட்டிடம் தேய்மானத் தொகை, வரவேண்டிய இனங்கள் மறு நிதியுதவி பெற தகுதியானவையாகும். இத்திட்டத்தின் கீழ் கடன் தள்ளுபடி மற்றும் மறு சீரமைப்புக்குத் தேவைப்படும் நிதி, தலைமை சங்கமான தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு (கோஆப்டெக்ஸ்) மைய மற்றும் மாநில அரசுகள் **75:25** என்ற விகிதாச்சார அடிப்படையிலும், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு **80:20** என்ற விகிதாச்சார

அடிப்படையிலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. தனியார் நெசவாளரால் பெறப்பட்ட கடன் தொகையில் ரூ.50,000/- வரை திரும்ப பெற இயலும். தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் முகமை நிறுவனமாக செயல்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 2012–2013ஆம் ஆண்டில் ரூ.97.83 கோடி (மைய அரசு பங்கு ரூ.76.51 கோடியும் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.21.32 கோடியும்) 590 தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கோ–ஆப்டெக்ஸ் மற்றும் 520 தனியார் நெசவாளர்கள் ஆகியோருக்கு மறுநிதியுதவியாக விடுவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, இத்திட்டத்தின் கீழ் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.49.88 கோடி (மைய அரசு பங்கு ரூ.39.80 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.10.08 கோடி) 128 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மறுநிதியுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### 4.7 நெசவாளர்களுக்கான கடன் அட்டை வழங்கும் திட்டம்

நெசவாளர்களுக்கான கடன் அட்டை வழங்கும் திட்டம் 2011–2012ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் நோக்கில் நெசவாளர் கடன் அட்டை வழங்கும் திட்டம்



செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தகுதியுள்ள நெசவாளர்களுக்கு நிதியுதவி வழங்கும் வங்கிகள் மூலம் ரூ.25,000/–முதல் அதிகபட்சமாக ரூ,2,00,000/– வரை கடன் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் ஒருவருக்கு விளிம்புத் தொகையாக ரூ.10,000/– வழங்கப்படுகிறது. இக்கடன் அட்டை மூன்று ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது மற்றும் வங்கி வட்டியில் 3 விழுக்காடு மானியமும், மத்திய அரசால் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2013–2014ஆம் ஆண்டில் 22,066 கடன் அட்டைகள் வழங்கப்பட்டு ரூ.56.54 கோடி கடனுதவி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2014–2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.8 விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டம்

விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டமானது, மத்திய அரசின் பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தில் நடைமுறைபடுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம், விற்பனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு திட்டம் மற்றும் பரவலாக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சி திட்டம் ஆகிய

திட்டங்களில் அடங்கியுள்ள பிரதான உட்கூறுகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டதாகும்.

இத்திட்டம், கைத்தறிகளின் முழுமையான முன்னேற்றம் மற்றும் கைத்தறி நெசவாளர்களின் நலத் தேவைகளை ஒருங்கிணைத்து அணுகும் முறையினைப் பின்பற்றும். இத்திட்டம், கூட்டுறவு அமைப்பினை சார்ந்த மற்றும் சாராத நெசவாளர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு மூலப் பொருட்கள், வடிவமைப்புத் தேவைகள், தொழில்நுட்ப மேம்பாடு கண்காட்சிகள் மூலம் சந்தை விற்பனைக்கு ஆதரவு அளித்தல், நகர்புற விற்பனை வளாகங்கள் என்ற வடிவில் நிரந்தர உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், விற்பனை வளாகங்கள், நெசவாளர் சேவை மையம் மற்றும் இந்திய கைத்தறி தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றை அமைத்தல், கைத்தறித் துணிகளை மின்–வர்த்தகம் மேற்கொள்ளும் வகையில் இணைய தளம் அமைத்தல் போன்ற இனங்களுக்கு, தேவையின் அடிப்படையில் ஆதரவு அளித்து வருகிறது. இத்திட்டத்தின் பல்வேறு உட்கூறுகள் பின்வருமாறு:–

### 4.8.1 குழுமங்களை தொகுத்தல் திட்டம்

5000 கைத்தறிகளைக் கொண்ட குழுமங்கள் மற்றும் 300 முதல் 500 வரையிலான கைத்தறிகளைக் கொண்ட குழுமங்கள்



தொகுத்தல் திட்டத்திற்கு உட்படுத்தப்படும். தனிப்பட்ட முகமை / குழுவினால் அளிக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில், வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள குழுமங்கள் மட்டுமே தொகுத்தல் திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படும்.

தொகுத்தல் திட்டத்தின் கீழ் பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் செயல்படுத்தப்பட்ட குழுமங்களுக்கு பல்வேறு உட்கூறுகளை புகுத்தும்வண்ணம் குழுமம் ஒன்றிற்கு ரூ.50.00 இலட்சம் வரை நிதி உதவி அளிக்கப்படும். தொழில் நுட்ப மேம்பாடு போன்ற வன்பொருள் உட்கூறுகளுக்கான நிதி உதவி, மத்திய அரசு மற்றும் செயல்படுத்தும் முகமை/அமைப்பால் முறையே 80:20 அடிப்படையில் அளிக்கப்படுவதோடு, ஏனைய உட்கூறுகளுக்கான நிதி உதவி மத்திய அரசால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் முகமை நிறுவனத்திற்கு நிதியுதவி நேரடியாக அளிக்கப்படும்.

மேலும், பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின்போது நடைமுறைப்படுத்தப்பட்ட குழுமங்களுக்கு, ஒரு குழுமத்திற்கு கூடுதலாக ரூ.20 இலட்சம் (ரூ.60 இலட்சத்திற்கும் அல்லது ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டத் தொகைக்கும் மேலாக) நிதி உதவி அளிக்கப்படும். இந்நிதியுதவி மத்திய அரசு மற்றும் மாநில அரசு / செயல்படுத்தும் நிறுவனம் / பயனாளி முறையே 75:25

என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்தும் நிறுவனத்திற்கு நிதியுதவி, மாநில அரசின் மூலமாக வழங்கப்படும்.

**4.8.2 புதிய குழுமங்கள்**

சந்தைத் தேவைக்கேற்ப கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்யும் கைத்தறிகள் பெருமளவில் நிறைந்துள்ள இடம் கைத்தறி குழுமம் என வரையறுக்கப்படுகிறது. ஒன்று அல்லது மிக அருகருகே அமைந்துள்ள இரண்டு மாவட்டங்களின் நிர்வாகத்தின் கீழ் இரு வருவாய் கோட்டங்கள் / கிராமங்களில் இந்த கைத்தறிகள் அமைந்திருக்கலாம். இத்திட்டத்தின்கீழ் 200 முதல் 500 வரையுள்ள கைத்தறிகள் மற்றும் 2000க்கு மேல் 5000 வரையுள்ள கைத்தறிகளைக் கொண்டு புதிய குழுமங்களாக அமைக்க இயலும்.

ஒவ்வொரு குழுமத்திற்கான நிதியுதவியின் அளவு, குழுமத்திற்குரிய தேவைக்கேற்பவும், குழுமத்திலுள்ள வளர்ச்சித் திட்டம் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நடவடிக்கைக்கான வாய்ப்புகள், நிறுவனத்தின் தொழில்நுட்பம், நிதி, மேலாண்மை திறன், முதிர்ச்சி நிலை, குழுமத்தின் கடந்த கால செயல்பாடுகள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். மத்திய அரசினால் அனுமதிக்கப்படும் அதிகபட்ச நிதியுதவி 200 முதல் 500 வரை கைத்தறிகளைக்



கொண்ட ஒரு குழுமத்திற்கு ரூ.60 இலட்சம் வரையிலும் மற்றும் 2000 முதல் 5000 வரை கைத்தறிகளைக் கொண்ட ஒரு குழுமத்திற்கு ரூ.150 இலட்சம் வரையிலும் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், அடிப்படை ஆய்வு, கூர்ந்தாய்வு அறிக்கை தயாரித்தல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், தறித் தொழிலுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக்கையின் கீழ், செயல்பாட்டில் உள்ள தறிகளுக்கு நியூமேட்டிக் ஜக்கார்டு அமைப்பு மற்றும் மின் மோட்டாருடன் கூடிய ஜக்கார்டு இயந்திரம் வழங்குதல், கைத்தறிக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல், இரகம் மேம்படுத்துதல்/ இரகம் மாற்றம், ஜவுளி வடிவமைப்பாளர் மற்றும் விற்பனை செயல் அலுவலர் நியமித்தல், கணினியுடம் கூடிய ஜவுளி வடிவமைக்கும் அமைப்பு இயந்திரம், அட்டை துளையிடும் அமைப்பு இயந்திரம் வாங்குதல், நூல் கிடங்கு அமைக்கத் தேவையான திரண்ட தொகுப்பு நிதி, பொது வசதி மையம்/ சாயச்சாலை அமைத்தல், பணிக்கிடங்கு கட்டுதல் ஆகியவற்றிற்கான நிதி உதவி அளிக்கப்படும். புதிய குழுமங்கள் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு நான்கு ஆண்டுகளாகும்.

இத்திட்டம், தமிழ்நாட்டில் 2014-2015ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு 2014-2015ஆம் ஆண்டு

வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.8.3 புதிய குழு அணுகுமுறை திட்டங்கள்**

குழுமத் திட்டத்தின் கீழ் பயன்பெறாத, புவியியல் அமைப்பின்கீழ் அடுத்தடுத்து பொதுவான எல்லையைக் கொண்டும், ஒரே விதமான உற்பத்தி அம்சத்தில் ஈடுபடும் நெசவாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் குழு அணுகுமுறைத் திட்டங்கள் ஒரு திட்ட வடிவில் செயல்படுத்தப்படும். ஒரு குழுவில் 10 முதல் 50 நெசவாளர்கள் இருக்க வேண்டும். ஒரு குழுவிற்கான சராசரி நிதி உதவி ரூ.30,000/– ஆகும். குழு அணுகுமுறைத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கால அளவு இரண்டு ஆண்டுகளாகும்.

**4.8.4 விற்பனை ஊக்குவிப்பு திட்டம்**

விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழான இனங்களில் விற்பனை ஊக்குவிப்புத் திட்டம் ஓர் இனமாகும். கைத்தறித் துணி வகைகளின் ஒட்டுமொத்த விற்பனையை அதிகரிக்கும் வகையில் நுகர்வோர்களைக் கவரும் வண்ணம் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்காக கைத்தறி நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மாநில கைத்தறிக் கழகங்கள், தலைமை நெசவாளர் கூட்டுறவு



சங்கங்கள், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய அளவிலான கைத்தறி நிறுவனங்கள் ஆகியவை விற்பனை ஊக்குவிப்பு உதவித் தொகையினைப் பெற தகுதியுடைய நிறுவனங்களாகும்.

இத்திட்டத்தின் கீழ், கைத்தறி நிறுவனங்களின் கடந்த 3 ஆண்டுகளின் சராசரி விற்பனைத் தொகையில் 10 விழுக்காடு தொகை, விற்பனை ஊக்குவிப்பு நிதியாக வழங்கப்படுகிறது. இந்நிதியுதவி மைய மற்றும் மாநில அரசுகளால் 50:50 விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

2013–2014 ஆம் ஆண்டில், விரிவான கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்குவிப்பு தொகையாக மொத்தம் ரூ.82.35 கோடி (மத்திய அரசின் பங்கு ரூ.41.175 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.41.175 கோடி) அரசால் விடுவிக்கப்பட்டு, 877 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2014-2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு 2014-2015ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.89.805 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.8.5 கைத்தறி விற்பனைக்கான நிதி உதவி

கைத்தறி விற்பனைக்கான நிதியுதவி எனும் பிரிவு, விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாகும். உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தை அமைப்புகளில், விற்பனை வழிகளை மேம்படுத்தவும், வளர்ச்சியடையச் செய்யவும் ஒருங்கிணைக்கப்பட்ட சூழ்நிலைகளைக் கொண்டு ஒரு உன்னத நிலையினை உருவாக்குவதே கைத்தறி விற்பனைக்கான நிதி உதவியின் முக்கிய நோக்கமாகும். கைத்தறி விற்பனைக்கான நிதிஉதவி இனத்தின் உட்கூறுகள் பின்வருமாறு: –

1. உள்நாட்டு சந்தையினை மேம்படுத்துதல்
2. விற்பனை உட்கட்டமைப்பு வசதி
3. சந்தை அணுகுமுறை உருவாக்குதல்
4. கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி

### 4.9 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

நெசவாளர்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கவும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், 1975ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாக செலுத்தினால், மாநில அரசு தனது பங்காக, நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்கி வந்தது.



இத்திட்டத்திற்கு மத்திய அரசு, 1985–1986ஆம் ஆண்டிலிருந்து 2006–2007ஆம் ஆண்டு வரையில் மைய சிக்கன நிதி திட்டத்தின் கீழ் தனது பங்காக ஒரு ரூபாய்க்கு 4 பைசா வீதம் வழங்கி வந்தது. எனினும், மத்திய அரசு 01.04.2007 முதல் தனது பங்கான ஒரு ரூபாய்க்கு 4 பைசா வழங்குவதை நிறுத்திவிட்டது. இதனை ஈடுசெய்யும் வகையில், 12.07.2012 முதல் மாநில அரசு தனது பங்கினை ஒரு ரூபாய்க்கு 4 பைசாவிலிருந்து 8 பைசாவாக உயர்த்தி வழங்கி ஆணை பிறப்பித்தது.


இவ்வாறு, ஒரு ரூபாய்க்கு நெசவாளர்கள் பங்காக செலுத்தப்பெறும் 8 பைசா தொகையும், மாநில அரசால் செலுத்தப்பெறும் ஒரு ரூபாய்க்கு 8 பைசா தொகையும் சேர்த்து தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் அரசு கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த கணக்கில் இருப்பிலுள்ள தொகைக்கு மாநில அரசு **9.5** விழுக்காடு வட்டி அனுமதித்து வருகிறது. இவ்வாறு பெறப்படும் வட்டித் தொகையில், **6.5** விழுக்காடு வட்டித் தொகை நேரடியாக திட்ட கணக்கில் செலுத்தப்பட்டு, நெசவாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. எஞ்சிய **3** விழுக்காடு வட்டித் தொகை, நலத்திட்டங்களான தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது.


இத்திட்டத்தின் கீழ், 2012-2013ஆம் ஆண்டில் 68,400 கைத்தறி நெசவாளர்கள் பங்கேற்று சந்தா செலுத்திய தொகைக்கு ஈடாக 2013-2014 ஆம் ஆண்டில் மாநில அரசு தனது பங்காக ரூ.**8.17** கோடியை விடுவித்துள்ளது.

மேலும், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் வைப்புக் கணக்கில் உள்ள தொகைக்கு 2013-2014ஆம் ஆண்டில் 9.5 விழுக்காடு வட்டித் தொகை ரூ.20.83 கோடியையும் மாநில அரசு விடுவித்துள்ளது. 31.03.2014 அன்று உள்ளபடி, இத்திட்டத்தின் கீழ் 71,741 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.






**சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் விடுவிக்கப்பட்ட மாநில அரசின் பங்குத் தொகை**




**சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் விடுவிக்கப்பட்ட 9.5% வட்டித் தொகை**

2014–2015ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் 8 விழுக்காடு பங்குத் தொகை மற்றும் 9.5 விழுக்காடு வட்டித் தொகை வழங்கும் பொருட்டு, ரூ. 32 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.10 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்**

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்காக 1997ஆம் ஆண்டு முதல் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து, 60 வயது பூர்த்தியான நெசவாளர்கள் மாதந்தோறும் ரூ.1,000/– முதியோர் ஓய்வூதியம் பெற தகுதி பெறுகின்றனர். இதில், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.200/–ம், அரசு கணக்கிலிருந்து ரூ.800/–ம் சேர்த்து நெசவாளர் முதியோர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2013-2014ஆம் ஆண்டில், 17,238 நெசவாளர்கள் ரூ.20.69 கோடி அளவிற்கு முதியோர் ஓய்வூதியம் பெற்றுள்ளனர். இத்திட்டம் 2014-2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.





**முதியோர் ஓய்வூதியதாரர்**

**4.11 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்**

"தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்" 01.01.1992 முதல் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், நெசவாளர் 60 வயதிற்குள் இறக்க நேரிட்டால், அவரது வாரிசுதாரருக்கு 10 ஆண்டுகள் வரையிலோ அல்லது இறந்தவர் (உயிருடன் இருந்திருப்பின்) 60 வயது எய்தக் கூடிய காலம் வரையிலோ, இதில் எது இறந்த நெசவாளரின் குடும்பத்திற்கு அதிக பயனளிக்குமோ, அவ்வகையில்,

மாதமொன்றிற்கு ரூ.1,000/– வீதம் நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் தொகையான ரூ. 1000/–ல், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.350/–ம், அரசு கணக்கிலிருந்து ரூ.650/–ம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1,299 நெசவாளர் குடும்பங்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். 2013–2014ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.1.56 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தினை 2014–2015ஆம் ஆண்டில் செயல்படுத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.18.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.11 கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் உடல்நலத்தைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம், 2005–2006ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. கூட்டுறவு அமைப்பினைச் சார்ந்த மற்றும் சாராத அனைத்து கைத்தறி



நெசவாளர்கள் மற்றும் கைத்தறி நெசவு தொழில் சார்ந்த உபதொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் உறுப்பினர்களாவதற்குத் தகுதி பெறுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளர் குடும்பத்தில் 4 நபர்களுக்கு ஆண்டொன்றிற்கு அதிகபட்சமாக ரூ.15,000/– வரை, உள்நோயாளிகளுக்கான மருத்துவத்திற்காக ரூ.7500/–ம், புறநோயாளிகளுக்கான மருத்துவத்திற்காக ரூ.7500/–ம் மருத்துவ உதவி பெற்றுக் கொள்ளலாம்.

ஐசிஐசிஐ லோம்பார்டு நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு நெசவாளருக்கான காப்பீட்டு கட்டணமாக ஆண்டொன்றிற்கு ரூ.939.76 ஐசிஐசிஐ லோம்பார்டு நிறுவனத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளால் பின்வரும் வகையில் செலுத்தப்பட்டு வருகிறது:–

| | |
|---|---|
| மைய அரசின் பங்கு | ரூ.769.36 |
| மாநில அரசின் பங்கு<br>(நெசவாளர்களின் பங்காக மாநில அரசு வழங்கும் ரூ. 50/–ம் சேர்த்து ) | ரூ.170.40 |

2013–2014ஆம் ஆண்டில் ஐசிஐசிஐ லோம்பார்டு நிறுவனத்தால் 17 மருத்துவ முகாம்கள், ஈரோடு, காஞ்சிபுரம், திண்டுக்கல், விருதுநகர், பரமக்குடி, திருச்சி, நாகர்கோவில்,

திருவள்ளூர், சேலம், கடலூர், வேலூர், திருப்பூர், கோயம்புத்தூர், திருவாரூர், மதுரை, திருவண்ணாமலை மற்றும் கும்பகோணம் ஆகிய சரகங்களில் நடத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான குறைதீர்க்கும் குழு மைய அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இக்குழுவின் மூலம் காப்பீட்டு நிறுவனத்தின் மீதான கீழ்க்காணும் குறைகளை தீர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது:–

- காப்பீட்டு நிறுவனத்தால் பகுதி மற்றும் முழு மருத்துவ கோரிக்கையும் மறுக்கப்படுவது.
- மருத்துவ கோரிக்கைகளுக்கான தொகைகள் காலதாமதமாக வழங்கப்படுவது.
- காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து தேவையான ஆவணங்கள் அல்லது மருத்துவ அட்டைகள் வழங்காமல் இருப்பது அல்லது காலதாமதமாக வழங்குவது.

**2013–2014**ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் உள்ள நெசவாளர்களின் குறைகளை தீர்க்கும் வகையில் **10** குறை தீர்க்கும் குழுக் கூட்டங்கள் மதுரை, திருவள்ளூர், கடலூர், கரூர், திருச்சி, வேலூர், திருப்பூர், திண்டுக்கல், நாகர்கோவில் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய சரகங்களில் நடத்தப்பட்டுள்ளன.



நெசவாளர்கள் மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ் வசதியாகவும், வெளிப்படையாகவும் அதிக அளவில் மருத்துவ காப்பீடு பெறும் வகையில் “ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா” எனும் திட்டத்தின் அடிப்படையில் திருத்தப்பட்ட நல்வாழ்வு காப்பீட்டு திட்டத்தினை செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனடிப்படையில், **2014–15**ஆம் ஆண்டு முதல் கைத்தறி நெசவாளர்களுக்கான மருத்துவ உதவிகள் “ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா”திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு அமைப்பினை சார்ந்த மற்றும் சாராத கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறி தொழில் சம்பந்தப்பட்ட உபதொழில் செய்யும் தொழிலாளர்களும் பயன் பெறுவர்.

இப்புதிய நல்வாழ்வு காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஒரு நெசவாளர் குடும்பத்தில் நெசவாளர் உள்ளிட்ட **5** நபர்கள் வரை ஆண்டொன்றுக்கு ரூ. **37,500/–** வரையில் மருத்துவ உதவிகள் பெற்றுக் கொள்ளலாம். இதில் உள்நோயாளிகளுக்கான மருத்துவச் செலவினத்திற்கு ரூ.**30,000/–**ம் புறநோயாளிகளுக்கான மருத்துவச் செலவினத்திற்கு ரூ. **7,500/–**ம் மருத்துவ உதவி பெறலாம். இப்புதிய காப்பீட்டு திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் பயனாளிகளுக்கு கைவிரல் ரேகை பதிவுடன் கூடிய நவீன அடையாள அட்டைகள்

வழங்கப்படும். இதன் மூலம் இந்தியா முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளில் பணம் செலுத்தாமல், மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்தினை மாநில அளவிலான முகமை நிறுவனமாக மத்திய அரசு நியமனம் செய்துள்ளது.

ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா திட்டத்தின் காப்பீட்டு சேவை நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய வருடாந்திர காப்பீட்டு கட்டணம் 75:25 விகிதாசாரத்தில் மத்திய மற்றும் மாநில அரசால் செலுத்தப்படும்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள நல்வாழ்வு காப்பீட்டு திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக உள்ள **270046** பயனாளிகளும், **2014–2015**ஆம் ஆண்டில் புதிதாக அமல்படுத்தப்படும் "ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா" திட்டத்தின் கீழ் உறுப்பினராக்கப்படுவர். இப்புதிய திட்டத்திற்கு மாற்றப்படும் வரை, ஏற்கனவே உள்ள நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த கால நீட்டிப்பு செய்து மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



நல்வாழ்வு காப்பீட்டு திட்டத்திற்கென **2014–2015**ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. **5.45** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.13 மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா

### 4.13.1 கைத்தறி நெசவாளர் காப்பீட்டுத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்படும் இயற்கை மரணம், விபத்தினால் மரணம் அல்லது விபத்தினால் நிரந்தர ஊனம் அல்லது விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் போன்ற நிகழ்வுகளில் அதிக காப்பீடு வழங்கும் பொருட்டு, மத்திய அரசின் நிதியுதவிடன் **2004–2005**ஆம் ஆண்டு முதல் மகாத்மா காந்தி புங்கர் யோஜனா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், கூட்டுறவு அமைப்பினைச் சார்ந்த மற்றும் சாராத கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டம், இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட்டு ஒரு நெசவாளருக்கு ஆண்டொன்றுக்கு காப்பீட்டு கட்டணமாக ரூ.**330/–** பின்வரும் முறையில் செலுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| மத்திய அரசின் பங்கு | : | ரூ. 150/– |
| மாநில அரசு நெசவாளர்கள் சார்பாக செலுத்தும் தொகை | : | ரூ. 80/– |
| இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் செலுத்தும் பங்கு | : | ரூ. 100/– |

இத்திட்டத்தின் கீழ், உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தால் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை பின்வருமாறு:

| **விவரம்** | **காப்பீட்டுத் தொகை (ரூபாயில்)** |
|---|---|
| இயற்கை மரணம் | 60,000 |
| விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,50,000 |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | 1,50,000 |
| விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் | 75,000 |

**2013–2014** ஆம் ஆண்டில், **861** இறப்பு கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு ரூ.**5.58** கோடி காப்பீடுத் தொகையாக இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள காலமான கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் ரூ.25,000/– வழங்கப்பட்டு வருகிறது.



இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் காலம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் **2**–ம் தேதி முதல் அடுத்த ஆண்டு அக்டோபர் **1**–ம் தேதி வரை ஆகும். **2013–2014**ஆம் ஆண்டில் **2,34,608** கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறி தொடர்பான உபதொழில் செய்பவர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**2013–2014**ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்திற்கு நெசவாளர்கள் சார்பாக மாநில அரசின் பங்காக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய காப்பீட்டு தொகை ரூ.**1.88** கோடியினை மாநில அரசு விடுவித்துள்ளது.

**2014–2015**ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். **2014–2015**ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் நெசவாளர்கள் சார்பாக மாநில அரசின் பங்குத் தொகை செலுத்துவதற்காக ரூ.**2** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.13.2 சிக்ஷா சஹாயக் யோஜனா திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை

மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜன திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களின்

குடும்பத்தில் உள்ள 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு, (இரண்டு குழந்தைகளுக்கு) ஆண்டொன்றுக்கு ரூ.1,200/– வீதம் (ரூ. 600/– வீதம் இரு தவணைகளில்) அதிக பட்சமாக 4 ஆண்டுகளுக்கு அல்லது 12ஆம் வகுப்பு முடிக்கும் வரை சிக்ஷா சஹாயக் யோஜனா திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2013–2014ஆம் ஆண்டில் 49,770 மாணவ மாணவியர்களுக்கு ரூ.2.98 கோடி கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2014–2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.14 கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்

கைத்தறி நெசவாளர்களுக்கு 100 அலகுகள் வரை (இரு மாதங்களுக்கு) இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினை தமிழக அரசு, செயல்படுத்தி வருகிறது. 2013–2014ஆம் ஆண்டில், 1,40,005 கைத்தறி நெசவாளர்கள் ரூ.10.51 கோடி அளவிற்கு பயனடைந்துள்ளனர். இத்திட்டம் 2014–2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் மற்றும் வரவு– செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.11.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 4.15 விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்

விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 அலகுகள் வரை (இரு மாதங்களுக்கு) இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. 2013–2014ஆம் ஆண்டில், 1,03,653 விசைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

2013–2014ஆம் ஆண்டில் விசைத்தறி நெசவாளர்கள் சார்பாக ரூ.235.10 கோடி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

2014–2015ஆம் ஆண்டில் ரூ.246.86 கோடி வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.16 டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை கல்வி உதவித் தொகை திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளின் படிப்பினை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் மேற்படிப்புக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் பொருட்டு, ‘‘டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை’’, 1986ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு வருடமும் அதிகபட்ச முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு 33 பாடப்பிரிவுகளில், அவர்கள் அப்படிப்பை

முடிக்கும் காலம் வரை கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. **2012–2013**ஆம் ஆண்டு முதல், கல்வி உதவித் தொகை ஆண்டுக்கு ரூ.**4000** முதல் ரூ.**7500** வரை உயர்த்தப்பட்டு **33** பாடப்பிரிவுகளுக்கு வழங்கப்படுகிறது.

**2013–2014**ஆம் ஆண்டு முதல் இரண்டாவது அதிகபட்ச மதிப்பெண் பெறும் மாணாக்கர்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் **132** மாணாக்கர்கள் (**66** மாணவர்கள் மற்றும் **66** மாணவிகள்) உதவித் தொகை பெற்று வருகின்றனர்.

**2013–2014**ஆம் கல்வியாண்டில் தகுதியுள்ள **75** மாணாக்கர்களுக்கு உதவித்தொகை ரூ.**2,98,000/–** வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் **2014–2015**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.17 இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்

சேலத்திலுள்ள இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிலகத்தினால் நடத்தப்படும் **3** ஆண்டு கைத்தறி தொழில்நுட்ப பட்டயப் படிப்பிற்கு மாணாக்கர்களை தேர்வு செய்யப்படும்போது நெசவாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை



வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு, இந்த படிப்பில் சேர்க்கப்பட்ட மாணாக்கர்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி உதவித் தொகை வழங்கி வருகிறது.

(தொகை ரூபாயில்/ ஒரு மாணவருக்கு)

| வருடம் | மைய அரசின் பங்கு/மாதம் ஒன்றுக்கு | தமிழக அரசின் பங்கு/மாதம் ஒன்றுக்கு | மொத்தம் |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 200 | 200 | 400 |
| இரண்டாம் ஆண்டு | 225 | 225 | 450 |
| மூன்றாம் ஆண்டு | 250 | 250 | 500 |

புத்தகங்கள் வாங்குவதற்கென கூடுதல் உதவித் தொகை மற்றும் எதிர்பாரா செலவினமாக ஆண்டொன்றுக்கு ரூ.**1000/–** வழங்கப்படுகிறது. மேலும் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு கல்விச் சுற்றுலாப்படியாக ஆண்டொன்றுக்கு ரூ.**1000/–** மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு திட்டப் பணி உதவித் தொகை ரூ.**500/–**ம் வழங்கப்படுகிறது. இந்த நிதியுதவி தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகங்களின் ஆளுநர்களின் குழுக் கூட்டத்தில் இக்கல்வி உதவித் தொகையினை முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு முறையே மாதமொன்றுக்கு ரூ.400/– லிருந்து ரூ.1000/–, ரூ.450/–லிருந்து ரூ.1100/– மற்றும் ரூ.500/–லிருந்து ரூ.1200/– ஆக உயர்த்தி வழங்க முடிவு எடுக்கப்பட்டு, விரைந்து செயல்படுத்த தமிழக அரசின் இசைவு கோரப்பட்டது. தமிழ்நாடு அரசு உதவித் தொகையினை உயர்த்த இசைவு அளித்துள்ளது.

தமிழ்நாடு அரசு ஒதுக்கீட்டின் கீழ், கதக் (கர்நாடகம்) மற்றும் வெங்கடகிரி (ஆந்திரப்பிரதேசம்) ஆகிய இடங்களிலுள்ள பயிலகங்களில் பயிலும் மாணாக்கர்களுக்கும் இதேபோன்ற உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2013–2014-ஆம் கல்வியாண்டில் 95 மாணக்கர்களுக்கு உதவித் தொகையாக ரூ.4,38,750/– வழங்கப்பட்டது.

இத்திட்டம் 2014–2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**4.18 சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்**

கைத்தறி ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், சர்வதேச சந்தையில் கைத்தறி



பொருள்களின் விற்பனையினை மேம்படுத்தவும் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தினை 1975 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

ஏற்றுமதி உற்பத்தியினை தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடையே ஊக்குவிக்கும் பொருட்டு, சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க ஆண்டொன்றுக்கு ரூ.1.00 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நோக்கத்திற்காக, 2014–2015ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.19 சிறந்த புதுமையான வடிவமைப்வை உருவாக்கும் நெசவாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்**

கைத்தறியில் புதிய வடிவமைப்பினை அறிமுகப்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் புதிய வடிவமைப்பினை உருவாக்கும் நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. சிறந்த வடிவமைப்புகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகைகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.5,000 |
| இரண்டாம் பரிசு | ரூ.3.000 |
| மூன்றாம் பரிசு | ரூ.2,000 |

இத்திட்டத்தின் நோக்கம், புத்தம் புதிய வடிவமைப்புகளை உருவாக்குவதற்கான வசதியினை ஏற்படுத்துவதே ஆகும். இத்திட்டத்திற்கான செலவினம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் 2014–2015ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**4.21 சிறந்த நெசவாளருக்கான விருது**

கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கவும் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை மேலும் அதிகரிக்கும் நோக்கத்துடனும் “சிறந்த நெசவாளருக்கு” ரொக்கப் பரிசாக ரூ.1,00,000/- வழங்கும் திட்டத்தினை அரசு 2013–2014ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. 2013–2014ஆம் ஆண்டில் சிறந்த நெசவாளருக்கான விருது ரூ.1,00,000/- திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.



2014–2015ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் மற்றும் 2014–2015ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.1,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. துறையின் இதர முக்கிய திட்டங்கள்**

**5.1 நெசவாளர்களுக்கான சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 2013–2014 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 10,000 பசுமை வீடுகள் கட்டித் தரப்படும் என அறிவித்தார்கள். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர், நெசவாளர்கள் தங்கள் இல்லங்களிலேயே தறிகளை வைத்து நெசவுத் தொழில் செய்ய ஏதுவாக 365 சதுர அடி விரிவாக்க பரப்பளவில் அதிக அலகு தொகையில் நெசவாளர்களுக்கென 10,000 பசுமை வீடுகள் ரூபாய் 2.60 இலட்சம் செலவில் கட்டித்தரப்படும் என அறிவித்தார்கள்.



**முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு**



அதனடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சரின் நெசவாளர்களுக்கான சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அரசாணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்பட்டது. பட்டா நிலம் உடைய, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைய தகுதி பெறுகின்றனர். ஒவ்வொரு வீடும் தறிக்கூடத்துடன் கூடிய வாழும் அறை, படுக்கை அறை, சமையலறை, கழிவறை, மழைநீர் சேகரிப்பு வசதி மற்றும் சூரிய மின் சக்தியுடன் கூடிய மின் விளக்குகள் ஆகியவற்றை கொண்டிருக்கும். இத்திட்டம் ரூ.260 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த மாநில அரசு 2013–2014ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கு முதல் தவணையாக ரூ.92 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. 2014–2015ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் எஞ்சிய தொகையான ரூ.168 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.2 கைத்தறி நெசவாளர்களுக்கு பெடல் தறிகள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, நெசவாளர்களின் வேலைப்பளுவை குறைக்கவும், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தியினை மேம்படுத்தவும் அவர்களின் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கவும், ஆண்டொன்றிற்கு 2000 பெடல் தறிகள் வீதம் மூன்று ஆண்டுகளில் 6000 பெடல் தறிகள் ரூ.24 கோடி செலவில் நிறுவும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, முதற்கட்டமாக 2000 பெடல் தறிகள் நிறுவ ரூ.8 கோடி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வழங்கியுள்ளது.



**பெடல் தறி**



## 5.3 கைத்தறி நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்குதல்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் வருவாயை அதிகரித்து, தார் சுற்றுவதில் உள்ள வேலை பளுவினை குறைக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு தலா ரூ.1500/– மதிப்புள்ள 25000 மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் விநியோகம் செய்யப்படும் என்று அறிவித்தார்கள். மின்மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் 25000 நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## 5.4 தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்தல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து, பத்தாண்டுகள் நிறைவு செய்த பணியாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் சங்கத்தின் வகைப்பாட்டிற்கு ஏற்ப சிறப்பு காலமுறை ஊதியம் 01.01.2013 முதல் நிர்ணயம் செய்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

## 5.5 ஆயத்த ஆடை பயிற்சிக்கு உதவித் தொகை

கிராமப்புற மற்றும் நகர்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும், ஆயத்த ஆடை வடிவமைப்பு பயிற்சி மையத்தில் 45 நாட்களுக்கான பயிற்சியில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களை ஊக்குவிக்கவும், பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ.2000/– வீதம் 15000 பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகை வழங்க ரூ.3 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 5.6 தானியங்கி நாடாயில்லா விசைத்தறிகள் நிறுவுதல்

துணியின் தரத்தினை மேம்படுத்தவும், உற்பத்தியை அதிகரிக்கவும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கவும், 10 நாடாயில்லா தானியங்கி தறிகள் நிறுவுவதற்கு ரூ.4.78 கோடியினை கடனாக தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்கு அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.






**தானியங்கி நாடாயில்லா விசைத்தறி**

## 5.7 புதிய வடிவமைப்புகள்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் கைத்தறி துணி வகைகளின் விற்பனையினை மேம்படுத்துவதற்காக சென்னையிலுள்ள தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு நிறுவனம் மூலம் 500 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு 2013–2014ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய வடிவமைப்புகள் பரமக்குடி, நெகமம் (கோயம்புத்தூர்), வனவாசி

(சேலம்), சின்னாளப்பட்டி (திண்டுக்கல்), வடமணப்பாக்கம் மற்றும் ஆரணி (திருவண்ணாமலை) பகுதிகளிலுள்ள சங்கங்களின் உற்பத்திக்கு பயன்படுத்த விநியோகிக்கப்பட்டது. இப்பகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், இப்புதிய வடிவமைப்புகளுடன் கூடிய துணி வகைகளை தொடர்ந்து உற்பத்தி செய்து வெளிச்சந்தையில் விற்பனை செய்து வருகின்றன.

**5.8 கைத்தறி முத்திரைத் திட்டம்**

கைத்தறி துணி இரகங்களுக்கு தனித் தன்மையை உருவாக்கி, அதன் விற்பனையை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் அதிகரிக்கும் நோக்கத்தோடு, கைத்தறி முத்திரை திட்டம் மத்திய அரசால் 28.06.2006இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம், கைத்தறி தயாரிப்புகளுக்கு தனித்தன்மையை உருவாக்குவது மட்டுமல்லாமல், தயாரிப்புகளின் உண்மை தன்மை குறித்த உத்தரவாதத்தினை வாடிக்கையாளர்களுக்கு அளிக்கவும் உதவுகிறது. இத்திட்டம் மத்திய ஜவுளித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது



தமிழ்நாட்டில் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), தனி நபர்கள், தனியார் நெசவாளர்கள் / ஏற்றுமதியாளர்கள், கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்து கைத்தறி முத்திரையினை உபயோகித்து வருகின்றன. 31.03.2014 தேதிப்படி 7782 நிறுவனங்கள் / தனிநபர்கள் கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர்.

**5.9 பட்டு முத்திரை**

உள்ளூர் சந்தையிலும், சர்வதேச சந்தையிலும், பட்டு ரகங்களின் விற்பனையினை அதிகரிக்கும் பொருட்டு மத்திய அரசு 17.04.2004 முதல் “பட்டு முத்திரை” திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. பட்டு முத்திரை என்பது சுத்த மற்றும் இயற்கை பட்டு வகைகளான மல்பெரி, டஸ்ஸர், எரி அல்லது முகா பட்டினை கொண்டு தரத்தினை உறுதி செய்யும் ஒரு அடையாளமாக பட்டு இரகங்களில் ஒட்டப்படுகிறது. கர்நாடக சங்கங்களின் பதிவு சட்டம், 1960-இன்படி பதிவு செய்யப்பட்ட அமைப்பான இந்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய பட்டு வாரியத்தின் ஓர் அங்கமான இந்திய பட்டு முத்திரை நிறுவனத்தின் ஆதரவுடன் பட்டு முத்திரை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்திய பட்டு முத்திரை அமைப்பில் ஒரு தனிப்பட்ட நிறுவனம் மற்றும் மாநில அரசு நிறுவனங்கள், தலைமை மற்றும் தனியார் கூட்டாண்மை நிறுவனம் ஆகியவை உறுப்பினராகலாம். இந்த நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மட்டுமே அவர்களது பட்டு உற்பத்தியில் பட்டு முத்திரை வில்லைகளை உபயோகப்படுத்தலாம்.

**31.03.2014** முடிய, **74** பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இந்திய பட்டு முத்திரை அமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களாக உள்ளனர். மேலும், "உருகும் தன்மை உடைய வில்லை" (Fusion Labels) வரும் ஆண்டில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**5.10 கைத்தறி நெசவாளர் பயிற்சி மையங்கள்**

நெசவு செய்தல், சாயம் தோய்த்தல், வடிவமைப்பு, எம்பிராய்டரி மற்றும் துணிகளில் சிறப்பு வேலைப்பாடு ஆகியவற்றில் கைத்தறி நெசவாளர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசு ஈரோடு, கும்பகோணம், காஞ்சிபுரம், பரமக்குடி ஆகிய நான்கு இடங்களில் பயிற்சி மையங்களை அமைத்துள்ளது.

இப்பயிற்சி மையங்களின் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு வகுப்பறைப் பயிற்சி மற்றும் செய்முறைப்



பயிற்சி அளிக்கப்படுகின்றன. வகுப்பறைப் பயிற்சியில், தறியின் வகைகள், நூல் வகைகள் மற்றும் தரம், நெசவுத் தொழில் நுட்பம் ஆகியவை அடங்கும். செயல்முறைப் பயிற்சியில் தடிம இரக மற்றும் சன்ன இரக துணி நெசவுப் பயிற்சி, மேம்படுத்தப்பட்ட ஜக்கார்டு தறியில் நெசவுப் பயிற்சி ஆகியவற்றில் நெசவாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கைத்தறி நெசவாளர்களின் வருமானத்தை அதிகரிக்க புதிய இரகங்களில் மாறுவதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இளைய தலைமுறையினரை நெசவுத் தொழில் ஈடுபடுத்தவும், நெசவாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுமே இந்த பயிற்சி மையங்களின் முக்கிய குறிக்கோளாகும்.

தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ள பயிற்சி மையங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளின் விபரம் பின்வருமாறு:-

| வ. எண். | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தின் பெயர் | பயிற்சி மையம் துவக்கப்பட்ட நாள் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | இதுவரை பயிற்சி பெற்றுள்ள நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், ஈரோடு | 12.03.2010 | 25.71 | 1019 |
| 2. | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், கும்பகோணம் | 27.03.2013 | 46.09 | 290 |
| 3. | கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், காஞ்சிபுரம் | 30.03.2013 | 46.09 | 232 |
| 4. | வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம், பரமக்குடி | 31.03.2013 | 54.28 | 460 |

## 5.11 பட்டுத் தறிகளை மேம்படுத்தும் உதவி திட்டம்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காஞ்சிபுரம், சேலம், கும்பகோணம், திருவண்ணாமலை, கடலூர், திருச்செங்கோடு மற்றும் திருவாரூர் ஆகியப் பகுதிகளில் பட்டு நெசவு பிரதான தொழிலாக விளங்குகிறது. பட்டு தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான நெசவாளர்கள் வயதானவர்களாக உள்ளதால், அவர்களது வேலைப்பளுவினைக் குறைத்து உற்பத்தியை



அதிகரிக்கும் பொருட்டு, ஜக்கார்டு பெட்டி, டாபி, மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் போன்ற உபகரணங்களைக் கொண்டு பட்டுத் தறியினை மேம்படுத்த தமிழ்நாடு அரசும், மத்திய அரசின் மத்திய பட்டு வாரியமும் இணைந்து ஒரு நெசவாளருக்கு ரூ.10000/– நிதியுதவி அளிக்கிறது.

31.03.2014ஆம் தேதிய நிலவரப்படி, இத்திட்டத்தின் கீழ் 62 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை சார்ந்த, 2444 பட்டு நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 5.12 தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியம்

2000–2001ஆம் ஆண்டில் தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு தொழிலாளர் வாரியம் உட்பட 9 நலவாரியங்கள் அமைக்கப்பட்டன. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் வாரியத்துடன் 21.07.2004–இல் இணைக்கப்பட்டது. இதன் பின் 01.09.2006 முதல் இந்த வாரியம் தனியாக தொழிலாளர் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக உள்ளார். அரசுப்பிரதிநிதிகள் ஏழு நபர்களும், தொழில் அதிபர்கள் ஏழு நபர்களும், தொழிலாளர் பிரதிநிதிகள் ஆறு நபர்களும் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். நிதியுதவி, கல்வி உதவி தொகை, இயற்கை மரணம் / விபத்து / உடல் ஊனம் ஆகியவைகளுக்கான காப்பீடு இவ்வாரியத்தால் அளிக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி விவரங்கள் பின்வருமாறு:-

| வ.எண் | இனம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | விபத்து காப்புறுதி<br>அ) விபத்தால் மரணம் | 1,00,000 |
| | ஆ) விபத்தால் ஊனம் | ஊனத்தின் தன்மையை பொறுத்து |
| 2 | இயற்கை மரணம் | 15000 |
| 3 | ஈமச்சடங்கு உதவி | 2000 |
| 4 | கல்வி உதவி | |
| | i) 10ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1000 |
| | ii) 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 1000 |
| | iii) 11ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1000 |
| | iv) 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1500 |
| | v) 12ஆம் வகுப்பு தேர்ச்சி | 1500 |
| | vi) இளநிலை பட்டப்படிப்பு | 1500 |
| | vii) இளநிலை பட்டப்படிப்பு (விடுதியுடன்) | 1750 |
| | viii) முதுநிலை பட்டப்படிப்பு | 2000 |
| | ix) முதுநிலை பட்டப்படிப்பு (விடுதியுடன்) | 3000 |
| | x) தொழில்நுட்ப படிப்பு | 2000 |
| | xi) தொழில்நுட்ப படிப்பு (விடுதியுடன்) | 4000 |
| | xii) தொழில்நுட்ப மேற்படிப்பு | 4000 |
| | xiii) தொழில்நுட்ப மேற்படிப்பு (விடுதியுடன்) | 6000 |
| | xiv) ஐடிஐ / பாலிடெக்னிக் | 1000 |
| | xv) ஐடிஐ / பாலிடெக்னிக் (விடுதியுடன்) | 1200 |
| 5 | திருமண உதவி | 2000 |
| 6 | மருத்துவ உதவிகள் | |
| | i) மகப்பேறு உதவி | 6000 |
| | ii) மூக்குக்கண்ணாடி வாங்கிய செலவினத்தை ஈடுசெய்தல் | 500 வரை |
| 7 | ஓய்வூதியம்<br>(மாதம் ஒன்றுக்கு) | 1000 |



தற்போது, இந்நலவாரியத்தில் 2,61,589 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்நலவாரியத்தின் மூலம் 31.03.2014 வரை, 2,07,340 நெசவாளர்களுக்கு ரூ.45.69 கோடி நிதிஉதவி

வழங்கப்பட்டுள்ளது. 2013–2014ஆம் ஆண்டில், 27,238 பயனாளிகளுக்கு ரூ.6.25 கோடி நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.

### 5.13 தமிழ்நாடு விசைத்தறி நெசவு தொழிலாளர் நலவாரியம்

விசைத்தறி நெசவு தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைபடுத்துதல்) சட்டம், 1982ன் கீழ் **"தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நலவாரியம்"** என்ற அமைப்பினை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. நிதியுதவிகளான விபத்து காப்பீடு பயன், இயற்கை மரணத்திற்கான காப்பீடு பயன், ஈமச்சடங்கு செலவினத்திற்கான உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, ஓய்வூதிய பயன்கள், மூக்கு கண்ணாடி வாங்குவதற்கு உதவித்தொகை போன்றவை இவ்வாரியத்தின் வாயிலாக விசைத்தறி நெசவு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 1,35,629 விசைத்தறி நெசவு தொழிலாளர்கள், இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளதோடு, 80,729 பயனாளிகளுக்கு ரூ.16.87 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



### 5.14 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் , 1985

கைத்தறி நெசவாளர்களையும் / தொழிலையும், விசைத்தறிகள் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, மைய அரசு கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985–ஐ இயற்றியது. இதன்படி கைத்தறிகளில் மட்டுமே உற்பத்தி செய்ய பின்வரும் 11 இரகங்களை மைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) சேலை | (2) வேட்டி | (3) துண்டு, கம்சா மற்றும் அங்கவஸ்திரம் | (4) லுங்கி |
| (5)ஜடார் மேகலா/ பாநெக் | (6) ஜமக்காளம், டார்ரி (அல்லது) டார்ரட் | (7) டிரஸ் மெட்டீரியல் | (8)பேரெக் பிளாங்கெட், கம்பல் (அல்லது) கம்பளி |
| (9)ஷால், லோய், மப்ளர், பங்கி முதலியன | (10) உல்லன் ட்வீடு | (11) கேஸ், பெட்ஷீட், பெட் கவர், கவுண்டர்பேன், பர்னிசிங் (டேப்பஸ்டிரி, அப்ஹோல்ஸ்டிரி உள்பட) | |

பிரத்தியேக அமலாக்கப் பிரிவு ஒன்று சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு துணை இயக்குநர் (அமலாக்கம்) பதவி நிலையில் அமலாக்கம் அலுவலகமும் மற்றும் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர், மதுரை ஆகிய இடங்களில் உதவி அமலாக்க அலுவலர்களின் கீழ் சரக

அலுவலகங்களும் கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985-ஐ முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு இயங்கி வருகின்றன.

கைத்தறித் தொழிலைப் பாதுகாக்க விசைத்தறிகள் நிறைந்துள்ள பகுதிகளில் கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் குறித்து பொது மக்களிடையே விளம்பரப்படுத்த விழிப்புணர்வு பிரசாரங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985-ஐ தீவிரமாக அமல்படுத்தும் பொருட்டு விசைத்தறிகள் நிறைந்துள்ள பகுதிகளில் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2013–2014ஆம் ஆண்டில் 57,072 விசைத்தறிகள் ஆய்வு செய்யப்பட்டது. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985–ஐ தீவிரமாக அமல்படுத்தியதன் விளைவாக 104 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டன. இதில் 41 வழக்குகளில் தண்டனை வழங்கி முடிக்கப்பட்டன. இதுவரை, 114 விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது.

## 5.15 மாவட்ட அளவிலான கண்காட்சிகள்

2013–2014 ஆம் ஆண்டில், கரூர், கடலூர், பரமக்குடி, ஈரோடு (2 கண்காட்சிகள்), மதுரை, சேலம் (2 கண்காட்சிகள்), கும்பகோணம் (2 கண்காட்சிகள்), கோயம்புத்தூர் ஆகிய 11 இடங்களில் மாவட்ட அளவிலான கண்காட்சிகளும், சென்னை,



கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 3 இடங்களில் சிறப்பு கைத்தறி கண்காட்சிகளும் நடத்தப்பட்டு ரூ.6.05 கோடி அளவிற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கண்காட்சி நடத்துவதன் அடிப்படை நோக்கம் கைத்தறி பொருட்களின் மீதான விழிப்புணர்வினை ஏற்படுத்தி, விற்பனையினை அதிகரிப்பதே ஆகும்.

## 6. திருப்பூரிலுள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் திருப்பூர் நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி பின்னலாடை உற்பத்திக்கு புகழ் பெற்ற மையமாக விளங்குவதோடு, 2013–2014ஆம் ஆண்டில் ரூ.17,000 கோடி அளவிற்கு மேல் ஏற்றுமதி செய்து, நாட்டின் மதிப்புமிக்க அன்னிய செலாவணி ஈட்ட பங்களித்துள்ளது. இதனைத் தவிர, இத்தொழில் தமிழ்நாடு மட்டுமல்லாமல் இதர மாநிலத்தவர்களையும் சேர்த்து 5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. அதிக எண்ணிக்கையில் ஜவுளி நிறுவனங்கள் சாயமிடுதல், வெளுத்தல் மற்றும் பதனிடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருவதால் இதன் மூலம் வெளியேற்றப்படும் சாயக்கழிவுநீர் ஆறு மற்றும் இதர நீர் நிலைகளில் கலப்பதால் நீர் நிலைகள் மாசு அடைகின்றன.



**பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்**

உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் ஆணைப்படி, திருப்பூர் பகுதியில் சாயம் மற்றும் சலவை தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.742.93 கோடி திட்டத் தொகையில் அமைக்க திட்டமிடப்பட்டு, ரூ.519.46 கோடி அளவுக்கு வங்கியில் கடன் பெற்று அமைக்கப்பட்டுள்ளது. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் வங்கியில் பெற்ற கடனுக்கு அதிக வட்டி சுமையின் விளைவாக, அச்சுத்திகரிப்பு நிலையங்கள் வங்கிக் கடன் சுமையை குறைக்க



அரசிடம் கோரிக்கை வைத்தன. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கோரிக்கையினை ஏற்று மத்திய மற்றும் மாநில அரசு ரூ.300 கோடியினை மானியமாக 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியது. அதில், மைய அரசின் பங்கு ரூ.187.50 கோடி, மாநில அரசின் பங்கு ரூ.112.50 கோடி ஆகும்.

மாநில அரசு பூஜ்ய கழிவு நீர் வெளியேற்றம் என்ற நிலையை அடைவதற்கு கூடுதல் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வட்டியில்லா கடனாக ரூ.179.34 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கியுள்ளது.

**7. ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம்**

மத்திய அரசு, ஏற்கனவே செயல்படுத்தி வந்த ஆயத்த ஆடை ஏற்றுமதிப் பூங்கா திட்டம் மற்றும் ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத்திட்டம் ஆகிய இரு திட்டங்களையும் ஒருங்கிணைத்து, 2005ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தினை அமுல்படுத்தியது. இது 10–வது மற்றும் 11–வது ஐந்தாண்டு திட்ட காலங்களில் செயல்படுத்தப்பட்டு, 12–வது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த

ஜவுளிப்பூங்கா திட்டம் ஜவுளித்தொழில் நிறுவனங்களுக்கு உலகத்தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக துவக்கப்பட்டதாகும். இத்திட்டம், ஜவுளி அலகுகள், சுற்றுச் சூழல் மற்றும் சமூக தரத்திற்கு ஏற்ப வசதிகளை பெற வழிவகுக்கிறது. இத்திட்டம், இந்திய ஜவுளித் தொழிலின் தரத்தினை உயர்த்துவதற்கு உதவுகிறது. மேலும், இது பொது–தனியார் கூட்டமைப்பு முறையில் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள **15** ஜவுளி பூங்காக்களின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட வருடம் | நேரடி வேலை வாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை | மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | (ரூ.கோடியில்) | | | | | |
| **ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம்** | | | | | | | |
| 1 | நேதாஜி ஆயத்த ஆடை பூங்கா,திருப்பூர் | 17.62 | 13.76 | 50 விழுக்காடு பத்திரப் பதிவு விலக்கு | 2002 | 7000 | 9000 |
| 2 | ஆயத்த ஆடை பூங்கா, இருங்காட்டு கோட்டை | 26.70 | 10.68 | –– | 2004 | 10000 | 10000 |
| **ஜவுளித் தொழில் மைய உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம்** | | | | | | | |
| 3 | ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம், காஞ்சிபுரம் | **21.81** | **19.08** | **2.64** | **2004** | உட் கட்டமைப்பு | |
| 4 | காற்றாலை மின் உற்பத்தி திட்டம், டெகிக், திருப்பூர். | **25.00** | **12.25** | **––** | **2003** | மின் உற்பத்தி | |
| 5 | காவேரி உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப்பாளையம் | **33.32** | **19.91** | **3.98** | **2005** | **1500** | **15000** |
| **ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம்** | | | | | | | |
| 6 | உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம் | 55.42 | 22.17 | 4.98 | 2005 | 2500 | 3500 |
| 7 | உயர்தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப் பாளையம் | 34.82 | 13.93 | 3.13 | 2006 | 1500 | 1500 |
| 8 | மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி | 87.30 | 34.92 | 7.86 | 2007 | 3000 | 4000 |
| 9 | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர் | 116.10 | 40.00 | 9.00 | 2007 | 3000 | 4000 |
| 10 | கில்ட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, செங்கப்பள்ளி, திருப்பூர் மாவட்டம் | 149.45 | 40.00 | 9.00 | 2006 | 5000 | 7500 |
| 11. | சைமா பதனிடும் ஆலை, கடலூர் | 111.60 | 40.00 | 9.00 | 2007 | 5000 | 10000 |
| 12 | வைகை உயர்தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, ஆண்டிப்பட்டி | 61.01 | 24.40 | 4.37 | 2009 | 2500 | 3500 |
| 13 | பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா, காஞ்சிபுரம் | 83.83 | 33.53 | 7.54 | 2010 | 10000 | 8200 |
| 14 | எஸ்.எல்.எஸ் ஜவுளிப் பூங்கா, பாகலூர், கிருஷ்ணகிரி | 126.20 | 40.00 | 9.00 | 2011 | 5000 | 2300 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | மைய அரசு மானியம் (ரூ.கோடியில்) | மாநில அரசு மானியம் (ரூ.கோடியில்) | ஒப்பளிப்பு செய்யப்பட்ட வருடம் | நேரடி வேலை வாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை | மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறு வோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| 15 | பல்லவாடா தொழில் நுட்ப ஜவுளிப் பூங்கா, ஈரோடு | 115.27 | 40.00 | 9.00 | 2011 | 3000 | 2300 |
| மொத்தம் | | 1065.45 | 404.63 | 79.50 | | 59000 | 80800 |

ஜவுளித் தொழிலில் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு, அனைத்து ஜவுளிப் பூங்காக்களுக்கும், திட்டத் தொகையில் 9 விழுக்காடு அளவிற்கு, ரூ.9 கோடிக்கு மிகாமல் தமிழக அரசால் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிக்க மாநில அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.



## 8. துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### 8.1 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், (கோ–ஆப்டெக்ஸ்)

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் **(கோ–ஆப்டெக்ஸ்)** என்ற வணிகப் பெயரில் மாநில அளவிலான கூட்டுறவு நிறுவனமாக 1935 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நாட்டில் மிக முக்கியமான தலைமை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கமாக கைத்தறி நெசவாளர்களுக்கு குறைவில்லாத சேவையினை செய்வதில் 79 ஆண்டுகள் பணியினை நிறைவு செய்துள்ளது.

**முக்கிய நோக்கங்கள்**

- கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்கு உறுதுணையாக இருத்தல்.
- கூட்டுறவு பிரிவின் கைத்தறி பொருட்களை மேம்படுத்தி உற்பத்தியை அதிகரித்தல்.
- மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குதல்.

**நிறுவனம்**


இந்தியாவின் மிகப்பெரிய தலைமை கூட்டுறவு நிறுவனமாக விளங்கி வரும் கோ–ஆப்டெக்ஸ், இந்தியா முழுவதும் பரந்து விரிந்துள்ள தனது 200 விற்பனை நிலையங்கள் மூலமாக கைத்தறித் துணி இரகங்களை சந்தைப்படுத்தி வருகிறது. மொத்தமுள்ள சில்லறை விற்பனை நிலையங்களில், 133 விற்பனை நிலையங்கள் தமிழ்நாட்டிலும், 67 விற்பனை நிலையங்கள் வெளி மாநிலங்களிலும் அமைந்துள்ளன.

**2013–2014 ம் ஆண்டின் செயல்பாடுகள்**


**1. சில்லறை விற்பனை**

2013–2014ஆம் ஆண்டில், ரூ.301.44 கோடி மதிப்பிற்கு கைத்தறி மற்றும் விசைத்தறி துணி இரகங்கள் விற்கப்பட்டதில், ஏற்றுமதி விற்பனையான ரூ. 1.25 கோடியும் அடங்கும். இது சென்ற ஆண்டு நடைபெற்ற சில்லறை விற்பனையை விட ரூ. 56.83 கோடி அதிகமாகும். விழாக்கால கொள்முதல் என்கிற அடிப்படையினை மாற்றி தொடர் கொள்முதல் செய்ததன் மூலமாகவும், விற்பனை நிலையங்களை நவீனப் படுத்தியமையாலும், புதிய வடிவமைப்புகளுடன் கூடிய கைத்தறி துணிகளை அறிமுகப்படுத்தியதாலும் இந்த வரலாற்று விற்பனை சாதனையை கோ– ஆப்டெக்ஸ் நிறுவனம் எய்தியுள்ளது.







**சில்லறை விற்பனை (மதிப்பு ரூ. கோடியில்)**




**உற்பத்தி வாரியான விற்பனை 2013–2014**




**இரக வாரியான விற்பனை 2013–2014**

## 2. அரசு திட்டங்கள்

### அ) விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் பண்டிகையின் போது விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் முகமை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம், பொங்கல் 2014 பண்டிகைக்காக 172.51 இலட்சம் சேலைகளும் 171.18 இலட்சம் வேட்டிகளும் மாவட்ட ஆட்சியர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.



### ஆ) முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்

முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் முகமை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் விளங்கி வருகிறது. பொங்கல் 2014 பண்டிகையின் போது 21.08 இலட்சம் சேலைகளும், 8.18 இலட்சம் வேட்டிகளும் மாவட்ட ஆட்சியர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

### இ) பள்ளிச் சீருடைத் துணி விநியோகம்

2012-2013ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ், 2013–2014ஆம் கல்வி ஆண்டிற்கு சமூக நலத்துறைக்கு மதிய உணவு திட்டத்தின் படியும் மற்றும் இதர நலத்துறைகளுக்கும் வழங்கிய சீருடைத் துணிகளின் விபரம் பின் வருமாறு:-

| வ. எண் | இரகம் | எண்ணிக்கை (இலட்சம் மீட்டரில்) |
|---|---|---|
| 1 | மெரூன் டிரில் | 121.51 |
| 2 | மெரூன் கேஸ்மெண்ட் | 141.12 |
| 3 | மெரூன் சட்டைத்துணி | 1.31 |
| 4 | லைட் பிரவுன் சட்டைத்துணி | 1.31 |
| 5 | லைட் பிரவுன் துப்பட்டா | 80.10 |
| **மொத்தம்** | | **345.35** |

## 3. நூல் விற்பனை

கூட்டுறவு நூற்பாலைகளிடமிருந்தும், தனியாரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாகவும் 01.04.2013 முதல் 31.03.2014 வரை ரூ. 81.59 கோடி மதிப்புள்ள நூல் வகைகளை கொள்முதல் செய்து, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்துள்ளது.

## 4. 2013–2014ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்

### 4.1 கோ–ஆப்டெக்ஸ் வடிவமைப்பகம்

தமிழக அரசு வழங்கியுள்ள ரூ.15 இலட்சம் நிதி உதவியுடன், கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வடிவமைப்பகம் 28.10.2013 முதல் செயல்பட்டு வருகிறது.

இந்த வடிவமைப்பகம் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் நோக்கில் ஒரு முதன்மை வடிவமைப்பாளர் மேற்பார்வையில் மூன்று தன்னார்வ வடிவமைப்பாளர்கள் மற்றும் இரண்டு தேசிய வடிவமைப்பு பயிற்சி மையத்தில் பயின்ற வடிவமைப்பாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

வடிவமைப்பகம் மூலம் இதுவரை பல்வேறு இரகங்களில் சந்தை நிலவரத்திற்கேற்ப 800 எண்ணிக்கையில் கண்கவர் வண்ணங்களில் புதிய வடிவமைப்புகளை, வடிவமைப்பாளர்கள்



உருவாக்கியுள்ளனர். 200 எண்ணிக்கையிலான வண்ண கலவையிலான வடிவமைப்பு அட்டைகள் கோ–ஆப்டெக்ஸ் வடிவமைப்பகத்தால் உருவாக்கப்பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு புதிய வடிவமைப்புகளை உருவாக்க ஏதுவாக வழங்கப்பட்டுள்ளது.

கோ–ஆப்டெக்ஸ் வடிவமைப்பகம் மூலம், 2013–2014ஆம் ஆண்டில் புதிய வடிவமைப்பு இரகங்கள் உருவாக்கப்பட்டு விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.



**கோ–ஆப்டெக்ஸ் வடிவமைப்பகம்**

## 4.2 ஜவுளி நூலகம்

தமிழக அரசின் ரூ.25 இலட்சம் நிதி உதவியுடன் கோ—ஆப்டெக்ஸ் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜவுளி நூலகம் **30.12.2013** முதல் செயல்பட்டு வருகிறது. இந்த ஜவுளி நூலகம் பார்வையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்திருக்கும். இந்நூலகத்தில் **450**க்கும் மேற்பட்ட ஜவுளி புத்தகங்கள், மாதாந்திர ஜவுளி இதழ்கள் வைக்கப்பட்டுள்ளன.



**ஜவுளி நூலகம்**



## 4.3 ஜவுளி தரப் பரிசோதனைக் கூடம்

கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனையை கணிசமாக உயர்த்தும் ஒரு வியாபார உத்தியாக, ஜவுளி தரப் பரிசோதனைக்கூடம் கோ—ஆப்டெக்ஸ் வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. கோ—ஆப்டெக்ஸில் உறுப்பினராக உள்ள சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணி இரகங்களின் தரம் இந்த ஜவுளி தரப் பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கப்பட்டு கோ-ஆப்டெக்ஸின் வாடிக்கையாளர்களுக்கு தரமான கைத்தறி இரகங்கள் விற்பனை செய்வதை உறுதி செய்து வருகிறது.

## 4.4 அகிம்சா பட்டுச் சேலை

“அகிம்சா” என்றாலே வன்முறையற்ற செயல் என்று பொருள். பொதுவாக, பட்டு சேலைகள் என்றாலே அதன் பளபளப்பு மற்றும் மிருதுத்தன்மை ஆகியவை நினைவுக்கு வரும். அதை அணிவதால் கம்பீரமும் மட்டற்ற மகிழ்ச்சியும் அனைவருக்கும் ஏற்படும். பட்டு சேலைகளை உற்பத்தி செய்ய பல்லாயிரம் பட்டுச் பூச்சிகள் தங்கள் உயிரை தியாகம் செய்கின்றன. ஆனால், பட்டுப் பூச்சிகளை கொல்லாமல் அவை கூட்டை விட்டு வெளியேறும் வரை காத்திருந்து அதன் பின்பு இந்த கூட்டிலிருந்து தயாரிக்கப்படும் பட்டு நூலிலிருந்து உற்பத்தி செய்யப்படுவதே “அகிம்சா” பட்டு சேலைகள். இந்த

பட்டு முகாபட்டிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த அகிம்சா மென் பட்டு சேலைகள் கோயம்புத்தூர் மண்டலத்தில் உள்ள திருப்பூர் மற்றும் சிறுமுகை பகுதியில் உள்ள கைத்தறி சங்கங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.



**அகிம்சா பட்டுச் சேலை**



### 4.5 தேசிய விருதுகள்

2013ஆம் ஆண்டு கோ—ஆப்டெக்ஸ் “கைத்தறி வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பு” மற்றும் ‘‘இந்தியாவில் அதிக அளவில் கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்த நிறுவனம்’’ ஆகிய இரு பிரிவுகளில் தேசிய விருதுகளை பெற்றுள்ளது.




**தேசிய விருது சான்றிதழ்**

### 4.6 நெசவாளர்களுக்கு அங்கீகாரம்

கைத்தறியில் நெசவு செய்யும் நெசவாளர்களின் உழைப்பையும், திறனையும் அங்கீகரிக்கும் வகையில், சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி சேலைகளில், அந்த சேலையை நெய்த நெசவாளருடைய புகைப்படம், பெயர், வயது மற்றும் நெய்தல் விவர அட்டையை இணைத்து அனுப்பும்

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஆரம்ப நிலையில் சேலை இரகங்களுக்கும் படிப்படியாக இதர கைத்தறி இரகங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.




**நெசவாளர் அட்டை**

## 5. சந்தைபடுத்துதலில் யுக்திகள்

### 5.1 தங்க மழை திட்டம்

சில்லறை விற்பனையை, பண்டிகை காலங்களான தீபாவளி, கிருஸ்துமஸ் மற்றும் பொங்கல் ஆகிய விழாக்காலங்களில் ஊக்குவிக்கும் நோக்கில், “தங்க மழை திட்டம்” என்னும் திட்டத்தினை ரொக்கத்திற்கு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ்



அறிமுகப்படுத்தியது. முதல் பரிசாக 110 வாடிக்கையாளர்களுக்கு 8 கிராம் தங்க நாணயமும், 110 நபர்களுக்கு ஆறுதல் பரிசாக 2 கிராம் தங்க நாணயமும் 11 மண்டலங்களில் வழங்கப்படவுள்ளது.

### 5.2 எல்லோருக்கும் பட்டு

நடுத்தர வருவாய் ஈட்டும் வாடிக்கையாளர்கள் வாங்கி உபயோகப்படுத்தும் வகையில் “எல்லோருக்கும் பட்டு” என்ற பெயரில் ரூ. 2300 முதல் ரூ. 3000 வரை விலையில், பட்டுச் சேலைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த பட்டுச் சேலைகள் வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதுகாறும் 23,000 எண்ணிக்கையிலான “எல்லோருக்கும் பட்டு” சேலை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 5.3 கனவு நனவு திட்டம்

“கனவு நனவு திட்டம்” என்னும் பிரபலமான மாதாந்திர சேமிப்புத் திட்டத்தினை கோ–ஆப்டெக்ஸ் அறிமுகப் படுத்தியுள்ளது. இத்திட்டத்தில், 2013–2014ஆம் ஆண்டில் 40,000 வாடிக்கையாளர்கள் சேர்ந்துள்ளதன் மூலம் கோ–ஆப்டெக்ஸ் முதல் தவணையாக வாடிக்கையாளர்–களிடமிருந்து ரூ. 140.00 இலட்சம் வசூலித்துள்ளது. இதன் மூலம் ரூ. 19.85 கோடி மதிப்பிற்கு விற்பனை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.4 இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்

"இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்" என்ற திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, கோ–ஆப்டெக்ஸில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், வாடிக்கையாளர்களின் மத்தியில் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.36.70 கோடி விற்பனை எய்தபட்டுள்ளது.

## 5.5. தமிழ் இலக்கியா, கல்வியும் காட்சியும், குட்டீஸ் மற்றும் தேனிலவு என அச்சிட்ட பருத்தி போர்வை

தமிழ் இலக்கியா, கல்வியும் காட்சியும், குட்டீஸ் மற்றும் தேனிலவு என அச்சிடப்பட்ட பருத்தி போர்வை இரகங்களை கோ–ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தி அதிக அளவில் வாடிக்கையாளர்களை கவர்ந்ததன் மூலம் விற்பனையை கணிசமாக உயர்த்தியுள்ளது.

## 5.6 வேட்டி தினம்

நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பை உறுதிப்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நமது பழமை வாய்ந்த கலாச்சாரத்தை இளந்தலைமுறையினர் போற்றுவதற்கும் ஜனவரி முதல் வாரத்தில் வேட்டி தினம் கொண்டாடப்பட்டது. வாடிக்கையாளர்களிடம் வேட்டி தினம் நல்ல வரவேற்பை



பெற்றுள்ளது. ஜனவரி 2014 மாத வேட்டி விற்பனை கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற வேட்டி விற்பனையை விட குறிப்பிடத் தகுந்த அளவில் உயர்ந்துள்ளது.

## 6. குழும வளர்ச்சித் திட்டம்

கைத்தறி மற்றும் துணிநூல் துறை, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 10 சிறிய கைத்தறி குழுமங்களையும் மற்றும் 4 சிறிய பட்டு கைத்தறி குழுமங்களையும் செயல்படுத்துவதற்கு அனுமதி அளித்தது. இந்தக் குழுமங்களின் நடவடிக்கைகள் பல்வேறு கட்டங்களில் முடியும் தருவாயில் உள்ளன. ஒருங்கிணைந்த கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 2006–2007ஆம் ஆண்டில் மத்திய அரசு நிதி உதவியுடன், திருவண்ணாமலை மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளில் இரு பெரிய குழும வளர்ச்சித்திட்டங்கள் ஒவ்வொன்றும் ரூ.2 கோடி மதிப்பீட்டில் தொடங்கி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக்குழுமங்களின் செயல்பாடுகள் நிறைவு பெற்றுள்ளது.

## 6.1 விருதுநகர் கைத்தறி பெருங்குழுமம்

ஒருங்கிணைந்த கைத்தறி குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் (CHCDS) விருதுநகர் கைத்தறி பெருங்குழுமம் 2009–2010ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு அதற்கென ரூ.87.68 கோடி நிதி ஒதுக்கப்பட்டு செயல்

படுத்தப்பட்டு வருகிறது. இதில், மத்திய அரசு ரூ.70 கோடி மானியமாகவும் மீதமுள்ள தொகை மாநில அரசு பயனாளிகள் பங்களிப்பாகவும் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 5 ஆண்டு காலங்களில் செயல்படுத்தப்படும். அதன் விவரம் பின்வருமாறு:—

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | வழங்கப்படும் உதவிகள் | மத்திய அரசு பங்கு | மாநில அரசு/பயனாளிகள் பங்கு தொகை | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | தொழில்நுட்ப மேம்பாடு | 3998.19 | 803.55 | 4801.74 |
| 2 | பொதுவசதி மையங்கள் | 1054.86 | 361.22 | 1416.08 |
| 3 | கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் சாயச் சாலைகள் | 714.04 | 380.96 | 1095.00 |
| 4 | விற்பனை/பயிற்சி/ வடிவமைப்பு வசதிகள் | 1189.14 | 222.45 | 1411.59 |
| 5 | சி.எம்.டி.ஏ—க்கான கட்டணம் (கோ—ஆப்டெக்ஸ்) | 43.62 | — | 43.62 |
| | **மொத்தம்** | **6999.85** | **1768.18** | **8768.02** |

**திட்டத்தின் நோக்கங்கள்**

கைத்தறி நெசவாளர்களின் திறனை மேம்படுத்தி பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தரமான கைத்தறி பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம், அதற்கு



தகுந்த கூலி உயர்வு நெசவாளிகளுக்கு கிடைக்கச் செய்துவதுடன், நெசவாளர்களின் வேலைப்பளுவை குறைப்பதும் இத்திட்டத்தினுடைய முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் விருதுநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 6 மாவட்டங்களின் உபகுழுமங்களான அருப்புக்கோட்டை, திருவில்லிபுத்தூர், சுந்தரபாண்டியம், ராஜபாளையம், பரமக்குடி, எமனேஸ்வரம், காரைக்குடி, செல்லூர், நிலையூர், சங்கரன்கோவில், வீரவநல்லூர், கடையநல்லூர், எட்டயபுரம் மற்றும் சாயர்புரம் பகுதிகளில் உள்ள சுமார் 30,000 கைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் பயன்பெற உள்ளனர்.

| வ. எண் | மாவட்டம் | நெசவாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | விருதுநகர் | 9,133 |
| 2 | மதுரை | 9,642 |
| 3 | இராமநாதபுரம் | 4,839 |
| 4 | திருநெல்வேலி | 3,855 |
| 5 | தூத்துக்குடி | 903 |
| 6 | சிவகங்கை | 678 |
| | **மொத்தம்** | **29,050** |

இத்திட்டம் கீழ்காணும் உட்கூறுகளைக் கொண்டுள்ளது.

அ) தொழில் நுட்ப மேம்பாடு — மாநில அரசு கோ—ஆப்டெக்ஸ் மூலம்

ஆ) பொது வசதி மையங்கள் அமைத்தல் — SPV1

இ) கழிவி நீர் சுத்திகரிப்பு வசதியுடன் சாய சாலைகள் உருவாக்குதல்–SPV2

ஈ) விற்பனை/பயிற்சி/வடிவமைப்பு வசதிகள் உருவாக்குதல்–SPV3

விருதுநகர் கைத்தறி பெருங்குழுமத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு தொழில் நுட்ப மேம்பாட்டிற்காக கீழ்காணும் தறி உபகரணங்கள் வழங்க ரூ.4801.74 இலட்சங்கள் (மத்திய அரசு – ரூ.3998.19 இலட்சங்கள், மாநில அரசு / பயனாளிகள் முனைவோர் பங்கு தொகை – ரூ.803.55 இலட்சங்கள்) ஒப்புதல் அளித்து அதனை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினை (கோ–ஆப்டெக்ஸ்) நியமித்துள்ளது.

இதுகாறும் அரசு கோ–ஆப்டெக்ஸிற்கு வழங்கியுள்ள தொகையின் விவரம் பின்வருமாறு :-

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | கட்டம் | மத்திய அரசு | மாநில அரசு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | முதல் கட்டம் | 599.72 | 73.22 | 672.94 |
| 2 | இரண்டாம் கட்டம் | 999.54 | 123.70 | 1,123.24 |
| 3 | மூன்றாம் கட்டம் | 1,199.46 | 111.25 | 1,310.71 |
| **மொத்தம்** | | **2,798.72** | **308.17** | **3,106.89** |



மேற்குறிப்பிட்டவாறு பெறப்பட்ட நிதி உதவியினைக் கொண்டு, கீழ்காணும் தறி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண் | உபகரணங்கள் | மொத்தம் | |
|---|---|---|---|
| | | கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது | விநியோகம் |
| 1 | பெடல் தறிகள் | 6,876 | 2,936 |
| 2 | ஊடை நூல் சுற்றும் இயந்திரம் | 8,875 | 5,275 |
| 3 | 120 ஊக்கு ஜக்கார்டு பெட்டி | 6,866 | 3,866 |
| 4 | டாபி பெட்டிகள் | 139 | 109 |
| 5 | மின்னியல் ஜக்கார்டு தூக்கு இயந்திரம் | 82 | 52 |
| 6 | அச்சு மற்றும் விழுதுகள் | 9,431 | 4,429 |
| 7 | மின்கலத்துடன் கூடிய மின்விளக்கு | 11,410 | 7,410 |
| **மொத்தம்** | | **43,679** | **24,077** |

மூன்றாம் கட்டமாக தறி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கான பணி நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தறி மற்றும் உபகரணங்களினால், உற்பத்தி அதிகரித்ததோடு நெசவாளர்களின் கூலியும் கணிசமாக உயர்ந்துள்ளது.

விருதுநகர் கைத்தறி பெருங்குழுமத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தர கீழ்காணும் அரசு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவையாவன:-

| வ. எண் | உருவாக்கப்பட வேண்டிய வசதிகள் | அரசு முகமைகளின் விவரம் |
|---|---|---|
| 1 | பொது பயன்பாட்டு வசதி மையம் | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் |
| 2 | நவீன சாயச்சாலை | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை. ஈரோடு. |
| 3 | விற்பனை கூடம் / பயிற்சி மையம் / வடிவமைப்பு மையங்கள் | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட். (கோ–ஆப்டெக்ஸ்) |

## 7. 2014–2015 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

கோ–ஆப்டெக்ஸ் 2014–15ம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

### 7.1 உயர்ந்தபட்ச விற்பனை இலக்கு

கோ–ஆப்டெக்ஸ் தனது இரகங்களின் தரத்தை மேம்படுத்தியும், மதிப்புக் கூட்டும் நடவடிக்கை, வியாபார உத்திகளில் புதிய அணுகுமுறையை கையாளுதல், அரசு துறை நிறுவனங்களுக்கு அதிகப்படியான தேவைப்பட்டியல் பெறுதல்



போன்றவை மூலம் 2013–14 ஆம் ஆண்டை விட அதிக அளவு சில்லரை விற்பனையை எய்தவுள்ளது.

### 7.2 தேவையான இரகங்களை உற்பத்தி செய்து கொள்முதல் செய்தல்

நெசவாளர் சங்கங்களின் இரக வாரியான உற்பத்தித் திறன் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களின் முழு விற்பனைத் திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, விற்பனைத் தேவைக்கான இரகங்களை முழு அளவில் கொள்முதல் செய்யும் வகையில் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்படும். விற்பனைத் திறனுக்கு மேற்பட்டு உற்பத்தியில் உள்ள இரகங்களை, விற்பனைத் திறன் தேவைக்கு ஏற்ற மதிப்புமிக்க இரகங்களாக மாற்றி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.3 ஆடை அலங்கார அணிவகுப்பு

கோ–ஆப்டெக்ஸ் விற்பனைக்கு அறிமுகம் செய்யும் புதிய இரகங்களின் விற்பனையை மேம்படுத்தவும், கைத்தறி துணியின் மேன்மையை பறைசாற்றும் வகையில் பாரம்பரியமும், நவீனமும் கலந்து, வாடிக்கையாளரின் மனம் கவரும் வண்ணம் ஆடை அலங்கார அணிவகுப்பினை நடப்பு ஆண்டு 2014–2015ல் சிறப்பாக நடத்த உத்தேசித்துள்ளது.

## 7.4 தமிழ்நாட்டின் பாரம்பரிய இரகங்களைப் புதுப்பித்தல்

தமிழக கைத்தறி நெசவாளர்களின் கைத்திறனில் உருவாகும் பாரம்பரியமிக்க சேலை இரகங்களான கோடம்பாக்கம் சேலைகள், கண்டாங்கி சேலைகள், அருப்புக்கோட்டை சேலைகள், சுங்குடி சேலைகள், சின்னாளப்பட்டி சேலைகள், உறையூர் சேலைகள், ஜெயங்கொண்டம் சேலைகள் போன்றவைகளை இன்றைய இளைய தலைமுறையினர் விரும்பும் வண்ணம் நவீன வடிவமைப்புகளில் புதுப்பித்திட கோ–ஆப்டெக்ஸ் உத்தேசித்து அதற்கான ஆக்கபூர்வ பணிகளில் ஈடுபட்டுள்ளது. இதனால், பாரம்பரிய சேலை இரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுவதுடன், பல நூற்றாண்டு தொன்மை வாய்ந்த இரகங்களை புதுப்பிக்கவும் இயலும்.

## 7.5 விற்பனையாளர்களுக்கான பயிற்சி

விற்பனையாளர்களுக்கு விற்பனையில் பயிற்சி என்பது இன்றியமையாத ஒன்றாகும். கடந்த ஆண்டில் அளிக்கப்பட்ட பயிற்சி போலவே இந்த ஆண்டும் கோ–ஆப்டெக்ஸ் தனது விற்பனை பிரிவு பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளது. இந்த பயிற்சி மூலம் பயன் பெறும் விற்பனை பிரிவு ஊழியர்களின் விற்பனைத் திறன் மேம்படுத்தப்பட்டு,



'வாடிக்கையாளர் சேவை மேம்படுத்துதல்' போன்ற விற்பனை உத்திகள் மூலம் வாடிக்கையாளர்களை திருப்திபடுத்தி விற்பனையைப் பெருக்க இயலும். கோ–ஆப்டெக்ஸின் விற்பனை வளர்ச்சிக்கு இது ஒரு முக்கியமான காரணியாக விளங்கும்.

## 7.6 கணினி மயமாக்கல்

கோ–ஆப்டெக்ஸின் அனைத்து விற்பனை நிலையங்களை கணினி மூலம் இணைத்து சரக்கு இருப்பினை மதிப்பிடல், விற்பனை விபரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளுதல், தேவையான சரக்குகளை விரைந்து வழங்கிடச் செய்தல் போன்ற நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள ஏதுவாக, மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை மூலம் ரூ. 15.85 கோடி மதிப்பிற்கு உலக வங்கியின் நிதி மானியத்துடன், அடுத்த 2 ஆண்டுகளில் கணினி மயமாக்கல் பணியினை நடைமுறைப் படுத்தவுள்ளது. இதன் மூலம் புதிய வடிவமைப்புகளை விரைவாக அறிமுகம் செய்தல், குறித்த காலத்தில் சங்கங்களுக்கு பணப்பட்டுவாடா செய்தல் ஆகியவை விரைவுபடுத்தப்பட்டு அதன்மூலம் கைத்தறி நெசவாளர்கள் பயன் பெறும் உன்னத பணியினை செவ்வனே நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.7 இயற்கை சாயமிட்ட ரகங்கள்

உடலுக்கு தீங்கு இழைக்காத, இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு சாயமிடப்பட்ட இயற்கை சாய துணி வகைகளை கோ–ஆப்டெக்ஸ் விற்பனைக்கு அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. துண்டுகள், சேலைகள், வேட்டிகள் மற்றும் பட்டுச் சேலைகள் ஆகிய இரகங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இயற்கை சாயமிட்ட இந்த இரகங்கள் இவ்வாண்டு விற்பனைக்கு கொண்டு வர கோ–ஆப்டெக்ஸ் திட்டமிட்டுள்ளது.

மேலும், கோ–ஆப்டெக்ஸில் விற்பனை பெருக்கத்திற்கு உதவும் திட்டங்களான ''இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்'' மற்றும் "கனவு நனவு திட்டம்'' போன்றவற்றை 2014–15ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.2 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம் லிமிடெட், சென்னை

கூட்டுறவு அமைப்பின் கீழ் இல்லாத நெசவாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காக நிதியுதவி வழங்கும் நோக்குடன் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.



இக்கழகத்தில், தற்போது 11,841 உறுப்பினர்கள் உள்ளனர். இக்கழகம், தற்போது உறுப்பினர்கள் பெற்ற கடன்களை திரும்ப பெறப்படாததால், குறைவான நடைமுறை மூலதனத்துடன் செயல்பட்டு வருகிறது. இக்கழகம் புதிய கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளது. ஏற்கனவே கடன்பெற்று திரும்ப செலுத்தும் உறுப்பினர்களுக்கு மட்டும் தொடர்ந்து கடன் வழங்கி வருகிறது.

இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமான ரூ.4.29 கோடியில், தமிழக அரசின் பங்கு ரூ.2.67 கோடியாகும். எஞ்சியுள்ள மூலதனமான ரூ.1.62 கோடி, அங்கத்தினர்களால் செலுத்தப்பட்டதாகும். இக்கழகம், தேசியமயமாக்கப்பட்ட வங்கியான பாரத ஸ்டேட் வங்கி மூலம் ரூ.3.30 கோடி காசுக்கடன் வசதி பெற்றுள்ளது. மேலும், பாரத பாட்டியாலா வங்கியிடமிருந்து பெற்ற காசுக்கடன் தொகை ரூ.2.17 கோடியை திரும்ப செலுத்த இயலாத நிலை ஏற்பட்டதால், அரசு ரூ.2.17 கோடி நிதி உதவி வழங்கி கடனை திரும்ப செலுத்த உதவியது.

நெசவாளர்களின் நலனை மேம்படுத்தும் விதத்தில் இக்கழகம் பல்வேறு நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. மைய, மாநில அரசு மானிய உதவியுடன், தமிழ்நாட்டில் 9 இடங்களில் ஒருங்கிணைந்த கைத்தறி

கூட்டுறவு குழும திட்டத்தின் மூலம், பல்வேறு நல திட்டங்களை நெசவாளர்களுக்கு அளிப்பதற்கான செயல் முகவராக இக்கழகம் செயல்பட்டு, முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுகளுக்கான செயல்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. மேலும், தற்போது, குழும செயல்பாடுகளுக்கான 3-ஆம் தவணைத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

இக்கழகம், 2013–2014–இல் நெசவாளர்களுக்கு ரூ.42.12 இலட்சம் கடனாக வழங்கி, அசல் மற்றும் வட்டியாக ரூ.115.04 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

### 8.2.1 2014 – 2015 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

- நிறுவனத்தின் கடன் வழங்கலில் முன்னேற்றம் காணும் பொருட்டு 250 கடன்தாரர்கள் பயன்பெறும் வகையில் ரூ.170 இலட்சம் வழங்கவும், கடன்தாரர்களிடமிருந்து ரூ.120 இலட்சம் கடன் மற்றும் வட்டி நிலுவையை வசூலிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- ஆகாஷ் நிறுவனம் மூலமாக இரயில்வே துறைக்கு ரூ.10 கோடி மதிப்பிலான கைத்தறி துணிவகைகள் விற்பனை செய்யவும் திட்டமிட்டுள்ளது.
- இக்கழகம் ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்தும் முகமை நிறுவனங்களில் ஒன்றாக இருக்கிறது. 2014–2015ஆம் ஆண்டுக்கு அதிகப்படியான குழும வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.
- 2014–2015ஆம் ஆண்டில் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் (National Handloom Develoment Corporation) ஆலை விலைக்கே ரூ.170 இலட்சங்கள் அளவிற்கு நூல் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது.
- கைத்தறி நெசவாளர்களுக்கு தேசிய மருத்துவ காப்பீட்டு திட்டம் (Rashtriya Swasthya Bima Yojana (RSBY) என்ற நல்வாழ்வு காப்பீட்டு திட்டத்தினை (Health Insurance Scheme) செயல்படுத்த தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தினை மாநில முகவராக அரசு நியமனம் செய்துள்ளது.
- ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தினை (Integrated Skill Development Scheme) செயல்படுத்தும் மாநில முகவராகவும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தினை அரசு நியமனம் செய்துள்ளது.

## 8.3 கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் 1958 முதல் 1985 வரையில், 4.70 இலட்சம் கதிர்களுடன் கிராமபுற நெசவாளர் குடும்பங்கள், தாயகம் திரும்பியோர் மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நூல் தேவையினை நியாயமான விலையில் தடையின்றி வழங்கும் நோக்குடன் துவங்கப்பட்டன.

பொருளாதார மந்த நிலை, சந்தை நிலவரம், பஞ்சு விலையேற்றம், பழைய இயந்திரங்கள், உற்பத்தி குறைவு மற்றும் மூலதன பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களினால் காலப்போக்கில் 13 கூட்டுறவு நூற்பாலைகள் முற்றிலுமாக செயலிழந்தன. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை தவிர இதர 12 கூட்டுறவு நூற்பாலைகள் கலைக்கப்பட்டுவிட்டன. தற்பொழுது, ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளான அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி, புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி, மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை மட்டுமே இயங்கி வருகின்றன. தற்பொழுது இயங்கிவரும் 5 கூட்டுறவு



நூற்பாலைகளிலும் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் நலனுக்காக மட்டும் ஆரம்பிக்கப்பட்ட அச்சங்குளத்தில் உள்ள இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை முழு அளவில் நவீனப்படுத்தி, விரைவில் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

மேற்படி 5 கூட்டுறவு நூற்பாலைகளை முழுமையாக நவீனப்படுத்த அரசு முடிவு செய்து, தென்னிந்திய துணிநூல் ஆராய்ச்சிக் கழகத்திற்கு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை அளித்தது. அதன் அடிப்படையில், தென்னிந்திய துணிநூல் ஆராய்ச்சிக் கழகம் ரூ. 104.41 கோடிக்கு திட்ட அறிக்கை தயாரித்துள்ளது. அரசு இதற்கான நிதியுதவியினை ஒப்பளிப்பு செய்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ.எண் | விபரம் | விகிதாச்சாரம் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து காலக்கடன் | 40% | 41.76 |
| 2 | மாநில அரசின் பங்கு மூலதனம் | 30% | 31.33 |
| 3 | தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து மானியம் | 20% | 20.88 |
| 4 | நூற்பாலைகளின் பங்களிப்பு (அரசுக் கடன்) | 10% | 10.44 |
| **மொத்தம்** | | **100%** | **104.41** |

ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டத்தொகையான ரூ.104.41 கோடியில், இதுவரை அரசு ரூ.62.65 கோடியினை சம்மந்தப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளுக்கு விடுவித்துள்ளது. புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கும், பழைய இயந்திரங்களை அப்புறப்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி மற்றும் பழைய இயந்திரங்களின் பாகங்களை பிரித்தெடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதே போன்று, தென்னிந்திய துணிநூல் ஆராய்ச்சி கழகம் பரிந்துரைத்த திட்ட அறிக்கையின் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையினை நவீனப்படுத்தி மீண்டும் திறக்க ரூ.18.43 கோடி திட்ட தொகையாக அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத் தொகையில் 75 விழுக்காடு தாட்கோ நிறுவனம் மானியமாகவும், 25 விழுக்காடு அரசின் பங்கு மூலதனமும் ஆகும். இதுவரை தாட்கோ நிறுவனம் மானியமாக ரூ.691.125 இலட்சமும், 50 விழுக்காடு அரசு பங்கு மூலதனத் தொகையாக ரூ.230.375 இலட்சமும் விடுவித்துள்ளது. புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கும், பழைய இயந்திரங்களை அப்புறப்படுத்தவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பழைய இயந்திரங்கள் விற்பனை செய்யப்பட்டு புதிய இயந்திரங்கள் நிறுவ தேவையான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



### 8.3.1 2013–14 ஆண்டிற்கான சாதனைகள்

- கூட்டுறவு நூற்பாலைகளுக்கு கொள்முதல் செய்யப்படும் பஞ்சு மற்றும் இந்நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல் வகைகளின் தரத்தினைப் பரிசோதித்து, அதன் அடிப்படையில் நூலின் தரத்தினை மேம்படுத்தும் விதமாக ஆண்டிப்பட்டியில் உள்ள அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் பொது தரப்பரிசோதனை மையம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ரூ.65 இலட்சம் செலவில் ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக பரிசோதனை மையத்திற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு, கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- இயங்கும் 5 கூட்டுறவு நூற்பாலைகளிலும், உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, தொழிலாளர்களின் பங்கேற்பினை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆலையிலும் சிறப்பாக பணியாற்றிய தொழிலாளி ஒருவரை ‘சிறந்த தொழிலாளி’ ஆக தேர்வு செய்து, நற்சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசாக தலா ரூ.25,000/– வழங்கப்பட்டது.

- இயங்கும் 5 கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை ஈரோடு ஆகிய நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் குழந்தைகளில், ஒவ்வொரு நிறுவனத்திலும் பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மூன்று குழந்தைகளுக்கு ரூ.5,000, ரூ.3,000, ரூ.2,000 வீதமும், பன்னிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மூன்று குழந்தைகளுக்கு ரூ.10,000, ரூ.7,500, ரூ.5,000 வீதமும் மொத்தம் ரூ.1.95 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,800/– அளவிற்கு ஊதிய உயர்வு வழங்கும் வகையில், மூன்று ஆண்டுகளுக்கான புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஆலை நிர்வாகங்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் 5 இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் 1015 தொழிலாளர்களுக்கு 01.01.2013 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளதுடன், ஊதிய உயர்வு நிலுவைத் தொகையான ரூ.2.19 கோடி அனைத்து தொழிலாளர்களுக்கும் முழுமையாக வழங்கப் பட்டுள்ளது.



- பொங்கல் 2014-க்கான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கு, 5 இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.67.80 கோடி மதிப்புள்ள 2786 மெட்ரிக் டன் நூலினை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளன.
- பள்ளிச் சிறார்களுக்கான விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 2014–2015ஆம் ஆண்டில் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக 5 இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.60.25 கோடி மதிப்புள்ள 2400 மெட்ரிக் டன் நூலினை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உற்பத்தி செய்து வழங்கும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளன.

## 8.4 தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், 1969–ஆம் ஆண்டில் நலிவடைந்த மற்றும் மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்தி புத்துயிர் அளித்திடவும், விசைத்தறிக் கூடங்களை நிறுவுவதற்கும், துணிநூல் தொழிலை மறு சீரமைக்கும் நோக்கத்துடனும் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் கீழ் 96 தறிகளைக் கொண்ட 2 விசைத்தறிக் கூடங்கள், அருப்புக்கோட்டை மற்றும் சிவகிரி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், கோவையிலுள்ள குறிச்சி

பகுதியில் 36 சாதா தறிகள் கொண்ட தறிக்கூடம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், பருத்தி மற்றும் பாலியஸ்டர் துணி வகைகளை உற்பத்தி செய்து வருகிறது. தற்போது, இக்கழகத்தில் 20 பணியாளர்களும், 140 தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

அரசின் விலையில்லா சீருடைத்துணி வழங்கும் திட்டத்தின் கீழ் வெளிர் பிரவுன், மெருண் மேல் சட்டை, டிரில் மற்றும் மெருன் கேஸ்மெண்ட் போன்ற துணிகளை இக்கழகம் உற்பத்தி செய்து வருகிறது. மேலும், இக்கழகம், சீருடைத் துணி தயாரித்து உற்பத்தி செய்து வழங்குவதற்கான ஆணைகளை மாநில போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு மின்வாரியம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு சிமென்ட்ஸ், ஆவின், அரசு மருத்துவ மனைகளிடமிருந்து பெற்று வழங்கி வருகிறது. இதன் மூலம் இக்கழகம், தமிழகத்தின் அரசு நிறுவனங்களுக்கான துணித்தேவையை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கிறது.

இந்நிறுவனம், 2013–2014ஆம் ஆண்டில் 287.60 இலட்சம் மீட்டர் துணிகளை ரூ.139.83 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து ரூ.1.38 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.



**8.4.1 2014–2015ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

இந்நிறுவனம், 2014–2015ஆம் ஆண்டில் 358.15 இலட்சம் மீட்டர் துணிகள் ரூ.220.93 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்து, ரூ.2.23 கோடி நிகர இலாபம் ஈட்டும் என எதிர்நோக்கப்படுகிறது.

**8.5 தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்**

தமிழ்நாடு சரிகை ஆலை 1974ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் ISO 9001–2008 தரச்சான்று பெற்ற மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகம் செய்கிறது. இந்நிறுவனம், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்யப்படும் சரிகையின் தரத்தினை பரிசோதனை செய்யும் பணியினையும் மேற்கொண்டு வருகின்றது. இந்நிறுவனம் காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள “ எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்” (X-Ray Fluorescence analyzer) மூலம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அவற்றில் உள்ள சரிகையின் தரத்தை ஆய்வு செய்யும்

பணியையும் மேற்கொள்கிறது. இவ்வாலையில் 8 பணியாளர்களும் 99 தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர்.

இந்நிறுவனம் 2013–2014ஆம் ஆண்டில் 19,648 மார்க்குகள் (Marc) சரிகையை உற்பத்தி செய்து 20,438 மார்க்குகள் சரிகை ரூ.21.53 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.

**8.5.1 2014– 2015ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

(i) தமிழ்நாடு சரிகை ஆலை, 2014–2015ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 2500 மார்க் சரிகையினை உற்பத்தி செய்து விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.



**தமிழ் நாடு சரிகை ஆலை**



(ii) இந்நிறுவனம் தொழிலாளர்களுக்காக தன்விருப்ப ஓய்வுத்திட்டத்தினை 2014–2015ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ளது.

**8.6 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு**

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாலை வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை ISO 9001-2008 சான்றிதழ் பெற்று, 19 பணியாளர்கள் மற்றும் 281 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. இவ்வாலை, ஒரு மாதத்தில் சுமார் 15 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது. துணிகளை பதனிடுவதோடு அல்லாமல், அரசு சீருடைத் திட்டத்திற்குத் தேவைப்படும் துணிகளை பதனிட்டு வழங்கும் பணியினை மேற்கொள்வதோடு, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், சர்வோதயா சங்கம், மத்திய சிறைச்சாலை, கோவை, கேரளா மற்றும் கர்நாடகா கைத்தறி வளர்ச்சிக் கழகங்கள் மற்றும் தனியார் ஏற்றுமதியாளர்களிடமிருந்து வழங்கப்படும் துணிகளையும் பதனிடுதல் மற்றும் அச்சிடல் பணிகளை மேற்கொண்டு வருகிறது.



**தமிழ் நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை**

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் குறியீட்டின்படி எதிர் சவ்வூடு பரவுதல் முறை மற்றும் திடக்கழிவு மேலாண்மை முறை (Reverse Osmosis plant with Reject Management System) மூலம் இவ்வாலையில் சாயக் கழிவு நீரினை சுத்திகரிப்பது மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீரினை பதனிடுவதற்கு பயன்படுத்துகிறது.

இவ்வாலையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பதனிடுதல் மற்றும் செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு:-



| வ. எண் | விவரம் | 2012-2013 | | 2013-2014 | |
|---|---|---|---|---|---|
| | | (அளவு கிலோ கிராம் / மீட்டர் இலட்சத்தில், மதிப்பு ரூபாய் இலட்சத்தில்) | | | |
| | | அளவு | மதிப்பு | அளவு | மதிப்பு |
| 1 | வெளுத்தல் | 17.83 கி.கி. | 140.46 | 18.60 கி.கி. | 149.69 |
| 2 | சாயம் தோய்த்தல் | 17.32 கி.கி. | 2293.90 | 18.16 கி.கி. | 2259.28 |
| 3 | அச்சிடுதல் | 0.14 மீ. | 11.02 | 0.27 மீ. | 19.52 |
| 4 | பாலியஸ்டர் துணி பதனிடுதல் | 133.55 மீ | 2406.04 | 136.10 மீ. | 2375.41 |
| 5 | பருத்தி துணி பதனிடுதல் | 3.58 மீ | 39.34 | 3.42 மீ. | 53.08 |
| 6 | மொத்த வணிகம் | 2445.38 | | 2428.49 | |
| 7 | நிகர இலாபம் | **(+) 326.93** (தோராயமாக) | | **(+)313.00** (தோராயமாக) | |

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3) ஒப்பந்தம் 01.02.2011 முதல் மேற்கொள்ளப்பட்டு ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வூதிய உயர்வினால் ஒரு தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ரூ.2,700 முதல் ரூ.3,200 வரை பணப்பயன் கிடைக்கிறது. இதனால் 194 தொழிலாளர்கள், ரூ.48 இலட்சம் வரை பணப்பயன் பெற்றுள்ளனர்.

2013–2014ஆம் ஆண்டில், இவ்வாலையில் 139.52 இலட்சம் மீட்டர் துணி பதனிடப்பட்டு, ரூ.24.28 கோடி மதிப்பிற்கு வணிகம் நடைபெற்று, ரூ.3.13 கோடி நிகர இலாபம் ஈட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 8.6.1 2014–2015ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்

இவ்வாலையில் உள்ள இயந்திரங்களை நவீனப்படுத்தி தற்போதைய பதனிடும் திறன் நாளொன்றிற்கு 50,000 மீட்டர் துணிகள் என்ற அளவினை 70,000 மீட்டர் துணிகளாக உயர்த்தவும், எதிர்சவ்வூடு பரவுதல் முறை மற்றும் திடக் கழிவு மேலாண்மை முறையினை விரிவாக்கம் செய்யவும் திட்டமிட்டுள்ளது. இவ்வாலையினை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு தேவையான நிதி ரூ.6.90 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து ரூ.5.82 கோடி நிதியுதவி பெற்றும், ரூ.1.08 கோடியினை ஆலையின் சொந்த நிதியிலிருந்து பயன்படுத்தியும், இப்பணி முடிக்கப்படும். புதிய இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு நவீனப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.



## 8.7 தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினை முறைப்படுத்தும் பொருட்டு, டிசம்பர், 1994ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்விணையத்தின் முக்கிய நோக்கம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை, நியாயமான விலையில் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள், இணையங்கள், இந்திய பஞ்சு கழகம் மூலம் கொள்முதல் செய்து விநியோகிப்பதாகும். இதற்காக, தமிழக அரசு பங்கு மூலதனமாக, ரூ.25 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.2.07 கோடியும் வழங்கியுள்ளது.

இந்நிறுவனம், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) மூலமாக ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள் பஞ்சு கொள்முதல் செய்து கொள்ள ஏதுவாக ரூ.1.50 கோடி முன்பணம் வழங்கியுள்ளது. இது தவிர கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பஞ்சு கொள்முதல் செய்வதற்காக நேரடியாக ரூ.65.00 இலட்சம் முன்பணம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் இணையம் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.25.02 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

## 9. 2014–2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடு

"கைத்தறி மற்றும் துணிநூல்" துறைக்கு 2014-2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் பின்வரும் விவரப்படி ரூ.1030.022 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2014-2015 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் | 49916.00 |
| 2 | கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் | 1103.00 |
| 3 | விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் | 24686.05 |
| 4 | கைத்தறித் துணிகள் விற்பனைக்கு தள்ளுபடி வழங்குதல் | 7845.50 |
| 5 | விரிவாக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்கத் தொகை | 8980.50 |
| 6 | விரிவாக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டம் | 200.00 |
| 7 | விரிவாக்கப்பட்ட கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கைத்தறிகளை மேம்படுத்த குழு அணுகுமுறைத் திட்டம் | 0.01 |
| 8 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் | 1000.00 |
| 9 | கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | 545.00 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2014-2015 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 10 | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 200.00 |
| 11 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் | 1819.46 |
| 12 | கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வட்டி மானியம் | 1050.00 |
| 13 | ஹட்கோ கடனை தள்ளுபடி செய்தல் | 135.72 |
| 14 | கைத்தறி நெசவாளர்களுக்கு பெடல் தறிகள் வழங்க உதவி | 800.00 |
| 15 | திருப்பூரில் உள்ள பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கடன் | 2066.00 |
| 16 | திருப்பூரில் உள்ள பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மானியம் | 0.01 |
| 17 | கடல்சார் கழிவு வெளியேற்று திட்டம் | 0.01 |
| 18 | ஈரோட்டிலுள்ள விசைத்தறி சேவை மையத்திற்கு வாடகை மானியம் | 0.24 |
| 19 | ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க மானியம் | 0.02 |
| 20 | கைத்தறித் தொழிலுக்கான புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு திட்டம் | 0.01 |
| 21 | அமலாக்கப் பிரிவின் நிர்வாகச் செலவு | 178.84 |
| 22 | நிர்வாகச் செலவுகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள்) | 2181.97 |
| 23 | சிறந்த கைத்தறி நெசவாளருக்கு பரிசு வழங்கும் திட்டம் | 1.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2014-2015 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 24 | கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தார் சுற்றும் இயந்திரங்கள் வழங்குதல் | 80.00 |
| 25 | 2 சரகங்களில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் கைவிரல் ரேகை பதிவு முறையில் கணினிமயமாக்குதல் | 7.75 |
| 26 | சாதா விசைத்தறிகளை நவீனப்படுத்துதல் | 80.00 |
| 27 | இயக்ககத்தில் உள்ள பதிவறை மற்றும் எழுதுபொருள் அறையை புதுப்பித்தல் | 10.00 |
| 28 | 5 சரக அலுவலகங்களில் உள்ள பதிவறைகளை புதுப்பித்தல் | 15.00 |
| 29 | காஞ்சிபுரம், வேலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய சரக அலுவலகங்களுக்கு பழையவற்றிக்கு மாற்றாக புதிய ஈப்புகள் வாங்குதல் | 23.51 |
| 30 | இயக்ககத்திற்கு 100 மின்விசிறிகள் வாங்குதல் | 2.50 |
| 31 | இயக்ககத்தில் கைவிரல் ரேகை பதிவு மூலம் வருகையை பதிவு செய்யும் முறையை நிறுவுதல் | 1.01 |
| 32 | இயக்ககத்தில் பழையவற்றிற்கு பதிலாக புதிய பணியாளர் வாகனம் வாங்குதல் | 8.50 |
| 33 | வடிவமைப்பு மேம்பாடு | 0.01 |
| 34 | இயக்ககத்திற்கு 20 புதிய கணினிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் 1 மடிக் கணினிகொள்முதல் செய்தல் | 10.50 |
| 35 | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மானியம் | 0.01 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவு திட்ட ஒதுக்கீடு 2014-2015 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 36 | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பங்கு மூலதனம் | 0.01 |
| 37 | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் / கடன்கள் | 0.05 |
| 38 | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு (கோ-ஆப்டெக்ஸ்) மானியம் | 54.01 |
| **மொத்தம்** | | **103002.20** |

**எஸ். கோகுல இந்திரா**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை
அமைச்சர்